தென்மொழி

25 காசுகள்

பொறுப்பாசிரியர்:
பெருஞ்சித்திரன்.

(17-9-59)

பொறுப்பாசிரியர்

பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர் குழு :

புலவர். முதுகண்ணன்

புலவர். ஆ. அழகன்.

பாவலர். மா. இலெனின். பி. ஏ.

கட்டுரை, கதை, பாடல்கள் எழுதும் அறிஞர்கட்கு வேண்டுகோள்.

—:—

- 'தென்மொழி' தூய தனித் தமிழ்க் கட்டுரை, கதை, பாடல்களையே ஏற்றுக்கொள்ளும்.
- அவ்வாறு அல்லாத நல்ல கட்டுரைகளைத் தமிழ்ப்படுத்தி வெளியிடும் உரிமையைத் 'தென்மொழி' ஏற்கின்றது.
- மாணவ, மாணவிகள் பயிற்சிப் பகுதிகளைத் 'தென்மொழி' விரைவில் வெளியிடும்,
- ஏற்றுக் கொள்ளப் பெறாத கட்டுரை, கதைகளைத் திருப்பிப்பெற வேண்டுமாயின் போதிய அஞ்சற்றலையும் உடன் வரல் வேண்டும்.
- கட்டுரைகள் தனிப்பட எவரையும் தாக்காது, பொதுப்பட அமைதல் வேண்டும்.
- தமிழ்மொழி, நாடு, மக்கள் வளர்ச்சிக்குக் கேடுதரும் கட்டுரை கதை, பாட்டு வகைகளைத் 'தென்மொழி' கண்டிப்பாக ஏற்காது.
- உயர்ந்த கட்டுரை, கதை, பாட்டு எழுதும் அறிஞர்கட்கு ஆசிரியர் விருப்பம்போல் அன்பளிப்புத் தரப்படும்.

கருத்திற் பதிக்க.

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை, பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர்தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

- ஆசிரியர்.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் 1 | திருவள்ளுவராண்டு 1990 புரட்டாசித்திங்கள் 1. (17—9—59) | இசை 4

முத்தமிழைக் காப்போம் முனைந்து

கற்றவரே! அன்பு கனிந்தவரே! செல்வச்சீர்
பெற்றவரே! இன்பம் பெறாமல் துடிப்பவரே!

சான்றோரை, நாட்டைச் சலியாது காப்பவரை
ஈன்றதாய் மாரே! இழிவறியா மங்கையரே!

தூய தமிழ்வளர்த்த தொன்மதுரைச் செம்புலிகாள்!
சாயாப் புகழ்காத்த சேரர் குலப் பிறப்பீர்!

சோழக் கொடிவழியீர்! சோர்வின்றிப் பூரிக்கும்
வேழத் தடந்தோள் விறல்மறவீர்! வேற்றுவர்க்கே

மேன்மேல் உழைத்து மிகுந்ததற்குக் கையேந்திக்
கூன்தங்கிப் போனவரே! கொப்பளிக்கும் நல்லுணர்வைச்

சாகடித்து விட்டுச் சாகா உரிமையினை
வேகடித்துத் தூங்குகின்ற வேங்கைத் தமிழ்மக்காள்!

கூற்றுவரே ஆனாலுங் கூப்பியகை யோடணைத்துப்
போற்றுந் தமிழ்மரபீர்! பொன்பொருளைத் தாமடையக்,

கற்றறிந்த செந்தமிழைக் காசுக்கே ஈடுவைத்துப்
பெற்றெடுத்த நாட்டைப் பெரும்பழிக்கே ஆளாக்கும்

கீழெண்ணங் கொண்டவரே! கேட்டுக் குழிக்குள்ளே
வீழென்னும் முன்னம் விழுந்திறக்கப் போவோரே!

வாடிக் குலைவதினும் வல்லுயிருக் காக கடல்
ஓடிப் பிழைக்கும் உலகத் தமிழ்க் குலத்தீர்!

எல்லோர்க்கும் யானென் றியம்புகின்றேன்; மாந்தரிலே
நல்லோர்க் கொருசொல் எனுங்கூற்றை நாடறியும்

ஆதலினால் எற்றுக்கும் ஆகாச் சிறுவனிதைக்
காதலினால் கூறலுற்றேன்! கன்னித் தமிழ் நாட்டீர்!

சேர்ந்தொருங்கே வாரீரோ! செந்தமிழர்க் கூட்டங்காள்!
நேர்ந்திருக்கும் உள்ள நெகிழ்வை அகற்றிவிட்டு,

நம்மை அரித்துவரும் நாற்சாதிப் பூசலெல்லாம்,
செம்மை ஒழுங்கில்லாச் சூழ்ச்சியெலாங் கட்டவிழ்த்தே

ஈன்றதாய் மேலாணை இட்டு, நமைக் காத்துவரும்
ஆன்ற மனைவிமேல் ஆணையிட்டுப் பெற்றெடுத்த

மூத்த பெரும்பிள்ளை முன்னேயோர் ஆணையிட்டுக்
காத்து வளர்த்ததமிழ்க் கன்னியின்மே லாணையிட்டு

முன்னர் நமக்கிருந்த மொய்ம்புகழ்மே லாணையிட்டுத்
தென்னவருக் கோர்முடிவைத் தேர்ந்திடுவோம் வாரீரோ!

செல்வத்தால் கண்ணிழந்து, சென்றோரைத், தாங்கொண்ட
பல்வளத்தால் இன்பப் பரண்மேல் இருப்போரை,

யாவரையும் பார்த்தே இயம்புகின்றேன்! நாமெல்லாம்
ஆவதிலே கண்ணின்றி ஆள்க் கருத்தின்றி

ஒற்றுமைப்பு மின்றி உணர்வின்றி நாணமின்றி
வெற்றுரையைப் பேசி விளைவில் நினைவின்றிச்

சீரழிந்து விட்டோம்! சிறப்பிழந்தோம்! நாமிருக்கும்
நேரழிந்து விட்டோம்! நிலைகுலைந்தோம்! ஆதலினால்

ஊரழியு முன்னம், உருவழியு முன்னேயே
பேரழியு முன்னம், பிழையறிந்து வாரீரென்

றெல்லோர்க்கும் கூறுகின்றேன்! ஏற்றதெனக் கண்டீரேல்
நல்லோர் ஒருவர் தலைமையிலே நாமொருங்கே

கூடித் தமிழுயர்த்துங் கொள்கை வழிப்பட்டே
ஈடில்லை எங்கட்கென் றேற்றக் குரல்கொடுப்போம்

வள்ளுவரைக் கற்றோம்! வளர்பயனைக் கண்டோமா?
தெள்ளுதமிழ்க் கற்றோர் திரள்பொருளைக் கண்டாரோ?

உற்ற நெறிநூல்கள் ஓரா யிரங்கோடி
பெற்றிருந்தும் நன்னெறியைப் பேணி வளர்த்தோமா?

பாரோர்க்குக் கூறி. பலநூற்கள் தாமெழுதி
ஊரோர்க்குக் கூறி. ஒருநெறியுந் தாங்கொள்ளாப்

பெற்றியரை யன்றோ பெருமளவிற் காண்கின்றோம்!
குற்றியுமி குற்றிக் குவித்தோய்ந்து போனோமே!

"பாட்டன் பரணிருந்தான்; பாராண்ட வேந்தனவன்;
பாட்டனுக்குப் பாட்டன் பவள அரியணையில்

நீட்டிப் படுத்திருந்தான்! நேர்ந்துவிட்ட காலத்தால்
ஓட்டைக் கட்டிலிலே ஒன்றி யிருக்கின்றேன்!"

என்றுபல சொல்வாரை யார்மதிப்பார்! பேரறிவீர்!
நன்றுசெய வேண்டாமா? நாமுழைக்க வேண்டாமா?

தண்டமிழ்த்தாய் ஆளுந் தனிநாடு வேண்டாமா?
பண்டிருந்த நன்னிலையைப் பார்த்துவக்க வேண்டாமா?

நாட்டில் வளங்குறைவா? நானியம்ப வல்லேனோ?
பாட்டுச் சுவைப்பெருக்கும் பாழடைந்து போகின்ற

ஆற்றுப் பெருக்கிற்கே ஆனதடை என்னேயோ?
காற்றைத் தடுக்கும் கணக்கில்லா வான்மலைகள்!

வித்தூன்றி வைத்தால் விளைவாகும் நன்னிலங்கள்!
முத்தெறியும் வீங்குகடல்! மூண்ட மணிப்புதையல்!

பொன்னும் இரும்பும் புகைக்கரியும் வேரோடி
மன்னும் பெருஞ்சுரங்கை! மாயாப் பெருவிளைவு!

கன்னல் குறைவா? கனிமரங்கள் தாங்குறைவா?
பின்னிக் கிடக்கும் பெருங்காடு ஒன்றிரண்டா?

ஆனை உதைத்தும் முடியிலையும் ஆடாத
வானை அணைத்த வளர்மரங்கள் கொஞ்சமா?

காளை உழுதாலோ கால்விளைவா காதென்றே
கூளி மதயானை கொண்டே உழத்தக்க

நல்வயல்கள் கோடி! நாற்றங்கால் பல்கோடி!
சொல்விளைவும் தோற்றுப்போம் நெல்விளைவு கண்டோமே!

இத்துணையாய்ப் பல்வளங்கள் இங்கிருந்தும் செந்தமிழர்
செத்தழிந்து போவதென்ன? சீர்குன்றிப் போவதென்ன?

கிள்ளை அடைமுட்டை கடும்பாம் பயின்றதுபோல்
கொள்ளை யடிக்கின்றார் கொடுவடவர்! கண்டோமா ?

ஆழரினைத் தின்றே அவர்வினைவை வெட்டொன்றில்
வீழக் கிடத்தி விறல்சூட வேண்டாமோ ?

நாட்டைப் புதுக்கி, நகர்புதுக்கி நாம் வாழும்
வீட்டைப் புதுக்கி வினைபுதுக்க வேண்டாமோ ?

கற்றுப் பெரும்பயனைக் கண்டவரார்? கல்லாரும்
உற்றபயன் என்னை? உழவரெல்லாம் என்னகண்டார் ?

ஊர்ப்பெயரை மாற்றும் உரிமைக்கும் வானொலியின்
பேர்ப்புதுக்கும் நல்லுரிமைப் பேச்சுக்கும் இல்லையெனின்

எற்றுக் கமைச்சரெலாம் இங்கிருக்க வேண்டுமவர்,
ஒற்றுக்குத் தாளம் உரக்கவே போடுதற்கா?

இஃதெல்லாம் எண்ணில் இமைமூட மாட்டுதில்லை!
எஃகுடலும் கூனியே ஈரடியாய் நாணின்றால்!

ஆன்ற தமிழ்மறவீர் ஆதலினால் கூவுகின்றேன்.
ஊன்றீர் தமிழ்க்கொடியை! ஊரைத் திரட்டுவமே !

உண்ணில் தமிழ்த்தாய் உயர்கொடிக்கீழ் இந்நாட்டு
மண்ணில் விளைந்த விளைவுண்போம்! மானம்போய்ச்

செத்தழிந்து போமுன்னே சீர்விளங்கப் பேர்விளங்க
முத்தமிழைக் காப்போம் முனைந்து!

∴ ∵ ∵

பகலுணவும் இராவுணவும்

ஒருகால் பேராசிரியர் தேவநேயப்பாவாணர் அவர்கள் சில ஆசிரிய நண்பர்களுடன் தாரைமங்கலம் என்ற சிற்றூர் போய் இரவு தங்கியிருந்து மறுநாட் காலையில் திரும்பி வந்தார். அவரைச் சில அன்பர் சூழ்ந்து கொண்டு, போய்வந்த வகைபற்றி உசாவினர். அவருள் ஒருவர் "ஐயா, பகலுணவும் இராவுணவும் எவ்வாறு இருந்தன" என்று கேட்டார், பேராசிரியர் சற்றுந் தயங்காமல் "பகல் உணவு பகல் உணவாகவும், இரா உணவு இரா உணவாகவும் இருந்தன" என்று விடையிறுத்தார். **பகல் உணவு** என்றதில் சென்றிருந்தார் யாவரும் பகுத்துண்ணும் படியான உணவு என்ற பொருளையும், இரா **உணவு** என்றதில், உணவு இன்றி இரவைக் கழிக்க வேண்டியிருந்தது என்ற பொருளையும் உய்த்துணர்ந்து அங்கிருந்தார் யாவரும் மகிழ்ந்தனர்.

ஏது தேவமொழி?

(ஞா. தேவநேயப் பாவாணர்; எம். ஏ., எம். ஓ. எல்.)

★

உலகிலுள்ள (ஏறத்தாழ) மூவாயிர மொழிகளுள், ஒரு சில, மறைநூலுடைமைபற்றித் தம்மைத் தூய மொழி (Holy Language) என்றும், அவற்றுள்ளும் சமற்கிருதம் தன்னைத் தேவ மொழி (Divine Language) என்றும், போற்றிப் புகழ்ந்து கொள் கின்றன. தூய மொழி என்பதினும் தேவ மொழி என்பது உயர் வானது. முன்னது மண்ணுலகத்தில் தெய்வத்தன்மை யடைந்த மக்கள் மொழி யென்றும், பின்னது விண்ணுலகத்தினின்றேனும் வீட் டுலகத்தினின்றேனும் மண்ணுலகத்திற்கு வந்த தேவர்மொழி யென் றும், கருத்துப் பிறப்பிப்பன.

உலகில் ஒரு மொழியும் தேவமொழி யன்று. ஒன் றைத் தேவமொழி யென்று குறிப்பின், அது பின்வருமாறு வகை யாகவே யிருத்தல் வேண்டும். அங்ஙனம் புனைந்துரைவகையிற் குறித்தற்கும், கீழ்க் குறிக்கப்பெறும் குணங்களனைத்தும் அதற் கிருத்தல் வேண்டும்.

(1) உலகமொழி முதன்மை.
(2) ஒலியெளிமை.
(3) பன்மொழித் தாய்மை.
(4) ஒப்புயர்வற்ற பண்பாடு.
(5) தூய்மை.
(6) மறைநூலும் பல்கலை இலக்கியமும் உண்மை.
(7) மக்கட் பொதுவுரிமை.
(8) நடுநிலை அறங்கூறல்.

இவ் வெண்ணியல்புகளும் ஒருங்கே தமிழிற்குள, இவற் றுள் ஒன்றிரண்டே சமற்கிருதத்திற்குள்ளன,

(1) வழக்கற்றுப்போன வேத ஆரிய மொழியும் அக் காலத்து வட்டார மொழிகளாகிய (தமிழ் உட்பட்ட) பிராகிருத மொழிகளும் கலந்த அரைச் செயற்கையான இலக்கிய மொழியே வடமொழி யென்று சிறப்பாய்க் கூறப்படும் சமற்கிருதமாம். (கி. மு. 2000.)

தமிழோ, மாந்தன் முதல் முதல் தோன்றிய (Lemuria என்னும்) குமரிநாட்டில், தானே தோன்றிய இயற்கை மொழி யாம். (கி. மு. 50,000).

"ஓங்கலிடைவந்து.,.......தன்னேரிலாத தமிழ்," என்னும் பழைய தனிப்பாவும் இதனைப் புலப்படுத்தும்.

(2) "ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் - ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர் வின்று."

என்று கோதமனாரும்.

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி.....
வள்ளுவர் வாய்மொழி மாண்பு."

என்று மாங்குடி மருதனாரும், கூறியவையே, தமிழொலி மென்மைக்கும் சமற்கிருதவொலி வன்மைக்கும் போதிய சான்றாம்.

(3) தமிழ் தென்னாட்டு மொழிகட்கெல்லாம் தாயாயிருப்பது போன்றே சமற்கிருதம், வடநாட்டு மொழிகட்கெல்லாம் தாய் என்றொரு தவறான கருத்து நெடுங்காலமாக நிலவி வருகின்றது. ஒரு காலத்திலும் உலக வழக்காய் வழங்காத அரைச் செயற்கையான இலக்கியக்கலவைமொழி, எங்ஙனம் தாய்மொழியாயிருத்தல் கூடும்? ஒரு மொழி முதற்கண் தனிமொழியாயிருந்தாலன்றோ பின்னர்த் தாய்மொழியாயும் அமைதல் கூடும்! தமிழ், திரவிடமொழிகட்குத் தாயும், ஆரிய மொழிகட்கு மூலமுமாயிருக்கும்போது, அவ் வாரிய மொழிகளுள் ஒலியளவில் முதுவளர்ச்சியடைந்த இலக்கியச் செயற்கைக்கலவை மொழியாகிய சமற்கிருதம் எங்ஙனம் உண்மையில் பன்மொழித் தாயாயிருத்தல் ஒல்லும்?

(4) "கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

என்று பரஞ்சோதி முனிவர் தருக்குமாறு, இலக்கணச் செம்மையும் வேறெம் மொழியினுமில்லாத பொருளிலக்கணமுமுடைய தமிழே மொழிப் பண்பாட்டில் தலைசிறந்ததாம்.

(5) பெருஞ் சொல்வள முடையதும் பிறமொழித் துணை வேண்டாததும் தனித்து வளர்ந்தோங்க வல்லதும் தமிழ் ஒன்றே.

> "அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
> ஒன்றே யாயினும் தனித்தமி ழுண்டோ?"

என்னும் சுவாமிநாத தேசிகர் கூற்று, மொழியாராய்ச்சி யில்லாத இருட்காலத் தெழுந்ததாதலின், அது இற்றைக்குப் பொருளற்ற தென விடுக்க,

சமற்கிருதத்திற்குள்ள சொல்வளம் பன்மொழிச் சேர்க்கையால் உண்டானதாதலின், அதுவும் சிறப்பிலதென்று விடுக்க.

(6) "பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே" (1336)
"மறைமொழி கிளந்த மந்திரத் தான," (1421)
"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" (1434)

என்னும் தொல்காப்பியர் கூற்றும்,

> "ஏரணம் உருவம் யோகம் இசை கணக் கிரதம் சாலம்
> தாரணம் மறமே சந்தம் தம்பநீர் நிலமு லோகம்,
> மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
> வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள,"

என்னும் பழந்தனிப் பாடலும், பண்டைத் தமிழில் மறைநூலும் பல்கலை இலக்கியமும் இருந்து பின்னர் இறந்து பட்டமையை உணர்த்தும். பண்டைத் தமிழிலக்கியம் இறந்துபட்டமையினாலேயே, அதன் மொழிபெயர்ப்பான சமற்கிருத இலக்கியம் இன்று முதல் தோன்றிய மூலமாகக் காட்சியளிக்கின்றது.

(7) ஆரியவேதத்தையும் அதன் வழிப்பட்ட சமற்கிருத நூல்களையும் தமிழரான சூத்திரர் ஓதின், அவர் நாவை, அறுத்து விட வேண்டுமென்றும், அவற்றைக் கேட்பின் அவர் காதில் உருக்கின ஈயத்தை வார்த்தல் வேண்டுமென்றும், ஆரிய அற நூல்கள் அறைகின்றன. தமிழையும் தமிழ் நூல்களை கற்றற்கும் கேட்டற்குமோ எத்தகைய குலமத கட்சியின விலக்கும் வேறுபாடுமில்லை.

"செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே--செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்."

என்று வெள்ளிவீதியாரும் பாடியிருத்தல் காண்க.

(8) ஆரிய அறநூல்கள் யாவும் கடுகளவும் நடுநிலையறியா தவை யென்பது, அவை குலத்திற்கொரு முறையும் தண்டமும் கூறுவதினின்று தெளிவாய் அறியப்படும்.

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்திற் கொருநீதி"

என்னும் சுந்தரம்பிள்ளை வாயுரை ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

இங்ஙனம் தமிழ் பல்லாற்றானும் தலைசிறந்த மொழியாயும், சிவநெறியும் திருமால்நெறியும் தூய தமிழ் மதங்களாயும் இருப்பவும், தமிழ் பொதுவழிபாட்டிற்குத் தகாத மொழி யென்று தள்ளப்பட்டபின்னும், தமிழர் ஆரியரினும் தாழ்ந்தவ ரென்று கொள்ளப்பட்டபின்னும், தமிழும் தமிழிலக்கியமும் இழிப்பிற்கும் அழிப்பிற்கும் இடனாய், இற்றைச் சிறுமையடைந் துள்ளன. அறிவும் ஆராய்ச்சியும் மிக்க இக்காலத்திலேனும், தமிழர் விழித்தெழுந்து தம் முன்னோர் நிலைமையடைய முயல் வாராக.

★ ★

சங்கம்.

சங்கம் என்பது வேற்று மொழிச் சொல்லே. புத்தர்கள் சமணர் களின் சமயத்துறவிக் கூட்டத்திற்குச் சங்கம் என்ற பெயருண்டு. தமிழ் முச்சங்கங்கள் இருந்தனவல்லவாவெனின் அப்பெயருக்குக் காரணம் கூறு வல். மதுரையில் நடந்த மூன்றும் கூட்டத்தில் புத்த சமணப் புலவர்கள் பல்கியிருந்தனர். அவருடனேற்பட்ட பழக்கத்தால் சங்கம் என்ற சொல் பரவிற்று. தமிழ் முக்கழகங்களின் வரலாற்றை வரைந்தவர் பிற்காலத்தவர். அவர் நாளில் வழங்கி வந்த சொல்லாகிய **"சங்கம்"** எக்கூட்டத்திற்கும் பெயராயிற்று. தமிழ்நூல்களைத் துருவிப் பார்ப்பீர்களாயின் சூதாடுமிடத் தைக் **கழக** மென்றும், கல்வி பயிலுமிடத்தைக் கழக மென்றும் சமய வேற்றுமை யுடையாரைத் **தொண்டர்க் கூட்ட** மென்றும், அரசியல் நடத்து பவரை **'ஐம்பெருங்குழு'** வென்றும் பல சொற்களால் குறிப்பிட்டிருப்பதை அறியலாம்.

மு. சி. பூரணலிங்கம். பி. ஏ. எல். டி.

LIFE LINES.

All the world is our home;
All the men our kith and kin.
Good and evil hap not
Caused by human hands;
So are pain and joy
Death is not strange to us
Nor do we lose balance in life.
We Feel not elated
Saying life is sweet;
Nor cry we, life is hell
When sorrows come.
We know life runs its natural course
Like a raft on a rapid stream, and hence
Neither worship we the Great,
Nor the smaller men disdain.

வாழ் முறை.

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே; முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே

புறநானூறு 192.
(கணியன் பூங்குன்றன் பாட்டு)

ஆங்கில ஆக்கம்: மா. இலெனின் தங்கப்பா. பி. ஏ., பி.
(ஆங்கில ஆக்க உரிமை: த. கோவேந்தன்.)

கற்பனை ஊற்று: 4

இன்பம்

இன்பமே! சிறு பொழுதாவது என் அருகில் இரு.

உன்னைப் பலநாட்களுக்கு ஒரு முறை பார்ப்பவர் பலர். அவர் தம்மில் யானும் ஒருவன்.

உனக்கு எங்கும் தங்குமிடம் இல்லையா? நீ எங்கும் எவரையும் அதிக நாட்கள் விரும்பி நெருங்கினதில்லையா?

நீ வாழ்வின் ஒளி!
நீ உயிர்களின் சிரிப்பு!
நீ உலகின் மலர்ச்சி!

உள்ளத்தில் குமிழியிடும் நீ, சொல்லிலும் செயலிலும் குதித்து நடமிடுகின்றாய்.

உன்னை இருகை நீட்டி அழைப்பவரை, நீ மதிப்பதில்லை.

உன்னைப் புரிந்து கொள்ளாதவரை அண்டிப் பெருமையை இழக்கின்றாய்.

நீ உலகத்தின் முதல்!
உயிரின் தோற்றம் நீ!

இன்பமே! நீ புலன்களின் தெளிவு! அவற்றின் முதிர்ச்சி! மென்மையின் விளக்கம் நீ!

உன் வரவைப் பாடி முடிப்பதற்குள் நீ பிரிவிற்கு முந்துகின்றாய்.
உழைப்பவர் அயர்வின் முடிவில் அவர்தம்மை அணைக்கின்றாய்.
அழியும் செல்வம், கரைந்து போவதோடு, நீயும் மறைகின்றாய்.
கற்றவர் நெஞ்சில் நீ கண்ட புதுமை என்ன?

அங்கு உன் குடியிருப்பை அமைத்துக் கொண்டதின் விளக்கத்தை நானறிவேன்.

குருடர்களுக்கு நீ செவி!
செவிடர்களுக்கு நீ ஒளி!

குழந்தைகளின் விரல் நகங்களிலும் நெற்றியிலும் ஒட்டிக்கொண்டிருக்கும் மயிர்ச்சுருள்களிலும் அவர்தம் வாயின் மழலையிலும், கண்களின் துறுகுறுப்பிலும் கால்களின் உதைப்பிலும் நீ உன் ஓவியத்தைத் தீட்டுகின்றாய்!

ஆண்களிடம் நீ இருப்பதாக எண்ணி
உன்னைப் பெண்கள் தேடுகின்றனர்.
பெண்களிடம் குடி கொண்டாய் என்று
ஆண்கள் உன்னை நாடுகின்றனர்.
விலங்குகளின் குரலிலும், தோற்றத்திலும்
நீ உன் அடிச்சுவட்டைப் பதிக்கின்றாய்!

பறவைகளின் துடிப்பிலும் உடலிலும் ஓசையிலும் நீ குதிக்கின்றாய்.

பிறப்புக்கு வித்து நீ!
இறப்பின் முடிவு நீ!
அழகின் கூறுபாடு நீ!
ஒழுங்கின் இறுதி நீ!

இன்பமே! செல்வரின் பெரும் பொருளுக்கும் ஏழைகளின் சிறு பொருளுக்கும் நீ வேற்றுமை காண்பதில்லை.

புலவரின் கண்கள் நீ தூங்குமிடம்!
அவர்தம் நெஞ்சு உன் விளையாட்டிடம்!
அவர்தம் நா உன் கூத்துமேடை!
அவர்தம் சொற்கள் உன் சிற்பம்!

பொருளற்ற புலவர்க்கு நீ மண்டியிடுகின்றாய்!
அவர்தம் பேச்சுக்கும் ஆணைக்கும் நீ ஏவல் செய்கின்றாய்!

பெண்களின் அவிழ்ந்த கூந்தலில் அசைகின்றாய்!
அவர்தம் பற்களின் ஒளி நீ!
அவர்தம் இதழ்களின் ஊற்று நீ!
அவர்தம் கண்களின் ஒவ்வொரு துடிப்பும்,
நீ காலெடுத்தாடும் கோலமோ?

அவர்தம் நெஞ்சகம் நீ விளையும் கழனி!
அவர்தம் இடை நீ வளைந்ததோ?
அவர்தம் அணைப்பு உன் வாய் வெறி முத்தம்!
இன்பமே!

ஏழைக்குத் தலைவன் நீ!
அவர்தம் வீடு உன் புறக்கடை!

மழையாய், காற்றாய், ஒளியாய், தீயாய்
நீ ஏழைகளுக்கு உதவுகின்றாய்!
மருந்தாய், உணவாய், பொருளாய், நீ
செல்வரிடம் அணுகுகின்றாய்!

∴ ∴ ∴ ∴ ∴ ∴

உன்னை வேண்டியவர் பலர்!
விரும்புவர் பலர்!
பெற்றவர் சிலர்!
பெறாதவர் இலர்!

— மெய்மைப் பித்தன்.

தம்மை மறந்தாரை

நாம் மறக்க மாட்டேமால்

மது. ச. விமலானந்தம். எம். ஏ.,
(தமிழ் விரிவுரையாளர்: சரபோசி கல்லூரி. தஞ்சை.)

—:0;—

எழுவாய்.

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு"

என நெஞ்சம் உணர்ந்ததை நேர்பட மொழிந்தார் நாமக்கல்லார். ஆம்! பண்பில் சிறந்தவன் தமிழன்; பண்பால் சிறந்தவனும் தமிழனே! இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வதும், தனக்கென வாழாத் தகைமையும், பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சமும், பெயக்கண்டு நஞ்சுண்டமையும் பெற்றியும், செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வண்மையும் தமிழ் இனத்தைத் தனி இனமாகவே கருதச் செய்தது போலும்! இத்தகைய தகைசால் அன்பில் ஒளிரும் பண்பாடுகள் தமிழனுக்கே உரியன என்றால் அஃது எத்துணையும் மிகையாகாது. தமிழன் பண்பிற்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புற நானூற்று அடியே போதிய சான்றாக அமையும். இதுவே தமிழ்ப் பண்பாட்டின் ஒளிவிளக்காய், குன்றிலிட்ட சுடரொளியாய் அமைந்து அழகு செய்கின்றது. என்னே தமிழ்ப் பண்பும் பெற்றியும்!

பாவலரும் பண்பும்:

இங்ஙனம் அவ்வப்போது ஏனை இனத்தைக் காட்டிலும் தமிழினத்திடையே ஒளிர்ந்த உயரிய பண்புகளை யெல்லாம் கண்ணுற்ற கன்னித் தமிழ்க் காவலர்கள், தாங்கள் ஆழ்ந்தறிந்த வாயிலாகக் கண்டுணர்ந்த பண்புகளைப் பாராட்டு மாற்றான் பாட்டாகவும், பாட்டிடை ஒளிரும் அடியாகவும் அமைத்துப் போற்றிப் புனைந்து சென்றனர். அங்ஙனம் விளங்குவதே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் புறப் பாட்டு. பண்பால் பாட்டும் நிலைபெறு எய்திற்று; பாட்டால் இப் பண்பும் ஏற்றமும் தோற்றமும் பெற்று ஒளிர்கின்றது. அதுபோன்றே நல்வேட்டனார், முடமோசியார், இளம் பெருவழுதி போன்றார் தாங்கள் கண்டு களித்த அரிய பண்புகளைப் பாட்டிடை வைத்து வாழ்த்திச் சென்றனர் எனலாம்.

பண்பும் பெருங்காப்பியமும்:

அம்முறையிற்றான் இளங்கோவடிகளும் தாம் தமிழரிடையே கண்டு களித்த தனிப்பெரும் - தலையாய - நிலையாய - அரிய பண்பிற்கு வரிவடிவந்து சென்றார்.

அதுவே :

" நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால் "

என்பது. ஆனால் ஏனையோர் எழுதிச் சென்றமைக்கும் இளங்கோ எடுத்தியம்புவதற்கும் வேறுபாடு உண்டு. புலவர் யாவரும் தாங்கள் கண்ட பண்பினைப் பாடலாக, பாட்டிடை ஒளிரும் அடிகளாக அமைத்துச் சென்றனர். ஆனால் சேரநாடு தந்த செந்தமிழ்ச் செல்வரோ, தாம் கண்டுணர்ந்த பண்பையே அடிப்படையாகக் கொண்டு ஒரு பெருங் காப்பியத்தையே - சிலப்பதிகாரத்தையே - யாத்துச் சென்றார். பண்பால் உயர்ந்தோரையே இணைத்தும் பிணைத்தும் சென்றமையாலோ என்னவோ அக்காப்பியம் அனைவருள்ளத்தையும் அள்ளுவதாக உள்ளது! பண்பை நிலைக்களமாகக் கொண்டு புனையப் பட்டமையால்தான் நல்ல கட்டுக்கோப்பும், படிப்போர் மனதைப் பற்றும் தகையவாய், படியாதாரையும் படிக்கத் தூண்டும் பெற்றியதாய் விளங்குகின்றது. இனிப் பண்பைப் பார்ப்போம்:

பண்பு:

இவ்வுலகில் நம்மை நாளும் நினைந்துருகுவோரையே நாம் நினைக்கின்றோமா என்பது ஐயத்திற்குரியது. அப்படி இருக்கையில், நம்மை நினையாதவரை நாம் நினைப்பதோ அரிது. ஆனால் பண்டைத் தமிழனிடம் ஓங்கி ஒளிர்ந்த பண்போ, தன்னை மறந்தவரையும் -- துறந்தவரையும் தான் நினைந்து போற்றுவதாகும். எண்ணத்திற்கும் அப்பாற்பட்ட இப் பண்பை எண்ணும்போது உள்ளம் குளிர்கின்றது; உவகை ஒளிர்கின்றது. நம்மை மறந்தாரை நாம் மறக்க இயலாத உள்ளம் எத்துணை மென்மையுடையதாய் இருக்க வேண்டும். **'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்'** என்ற அடியே நாம் மறக்குமாறில்லையே! என்னே தமிழன் பண்பு! பண்பைக் கண்டு வியந்த நாம், இனி இப் பண்பு பெருங்காப்பியத்தில் அமைந்தொளிரும் அழகையும், செந்தமிழ்ச் சிலம்பைச் சிறக்கச் செய்யும் சீர்மையையும் காண்போம்.

கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும் :

சிலம்பின் சீர்சால் தலைவன் கோவலன். அவன் பாத்தரும் பண்பினன்; கடக் களிறடக்கிய அருள் மறவன்; நல்வழிப் படுத்திய செல்லாச் செல்வன்; பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல். காப்பியத் தலைவி கண்ணகி கற்பின் செல்வி; காதற் கொழுநனும் கோவலனுக் கேற்ற கயமலர்க் கண்ணி; போதிலா உருவினள், புகழுடை வடிவென்றும், தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும் மாதராலேயே தொழுதேத்தப்படும் வயங்கிய பெருங்குணத்துக் காதலாள் பெயர் மன்னும் இக்கண்ணகியை, நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர்க் கீழ்த் தீவலம் செய்து ஏற்றான் கோவலன். தூமப்

பணிகள் ஒன்றித் தோய்ந்தாலென்ன இத் தயங்கிணர்க் கோதையும், வயங்கிணர் மாலையனும் ஒன்றி, விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

இங்ஙனம் வேறுபடு திருவின் வீறுபெறக்காணுமாறு அமைந்த இன்ப வாழ்வில் துன்ப இருள் சூழ்ந்தது. ஆடல், பாடல், அழகில் சிறந்த மாதவிபால் விடுதலறியா விருப்பினனாகி வடு நீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தான் கோவலன். ஆனால் செந்தமிழ்ப் பாவையோ;

தன்னைத் தன் கணவன் பல்லாண்டு மறந்து துறந்தபோதிலும், தான் மட்டும் ஒன்றிய உள்ளமும் ஓங்கிய உறுதியும் கொண்டு, வெறுத்த கோவலன்பால் விடுதலறியா விருப்புடனே நாளும் நினைந்து நைந்துருகினாள். அவள் நிலையை அடிகள்,

அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாள்முகஞ் சிறுவியர்ப் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி

(அந்திமாலைச் சிறப்பு 47-57)

என அழகுபட ஆனால் அவலந் தோன்றக் கூறினார். தன் கணவன் தன்னை மறந்தாலும் தான் மறக்குமாட்டாத தகைசால் பூங்கொடியின் திறமே திறம்! தன் கணவன் பரத்தை மாட்டுச் சென்றமை அறிந்தும் அவன்பால் நீண்ட அன்பும் நெகிழ்ந்த நெஞ்சமும் கொள்கின்றாள்! மீண்டு வந்தபோது தன் காற்சிலம்பையும் கனிவோடு கொடுக்க முனைகின்றாள்.

கண்ணகியும் காப்பியமும்:

ஆனால் அங்ஙனம் அமையாது தன்னை மறந்தவனைத் தானும் மறந்திருப்பாளாயின் கதையும் நடந்திராது; காப்பியமும் எழுந்திராது. கண்ணகி தன்னைத் துறந்த கோவலனைத் தானும் மறந்திருந்தால், சலம்புணர்

கொள்கைச் சலதியோடாடி மீண்டவனிடம் அன்பும் செலுத்தாள்; தன் காற் சிலம்பையும் தந்திராள்; தானும் மதுரைக்கு உடன் போந்திராள். எனவே சிலம்பின் காரணமாகக் கோவலன் கொலையுற்றிருக்கவும் நேர்ந்திராது. கண்ணகியும் கோமுறை செய்தானைத் தீமுறை செய்யவும் வழி இல்லை; மதுரையும் எரிந்திருக்காது. இங்ஙனம் கண்ணகி கணவனை மறந்திருப் பாளேயானால் கதையும் இல்லை. காப்பியமும் இல்லை.

கண்ணகியின் **'நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டாத'** பண்பே நம்மையெல்லாம் கொள்ளை கொள்ளும் சிலப்பதிகாரத்தின் தோற் றத்திற்கே அடிப்படை எனலாம். எனவே கன்னித்தமிழ்க் காப்பியமாம் **சிலப்பதிகாரம்** தந்த செந்தமிழ்ப் பாவைக்கு அனைவரும் கடமைப் பட்டுள் ளோம். இல்லையா? கண்ணகியின் காற்சிலம்பால் தோன்றியது இந்நூற் சிலம்பு. கண்ணகியின் இவ் அரிய பண்பின்றேல் காப்பியமே தோன்றி யிருக்க முடியாது.

மாதவியும் மாசாத்துவான் மகனும் :

கற்பின் செல்வி கண்ணகியின் நிலைகண்ட நாம், சேற்றில் மலர்ந்த செந்தாமரையாம் மாதவியின் மாண்பைக் காணவேண்டாமா? எந்த ஆடலும் பாடலும் கோவலன் மாதவி இருவரையும் கூட்டி வைத்ததோ அதே ஆடலும் பாடலும் அவ்விருவரையுமே பிரித்தது. மாதவி ஓர் மாயப் பொய் பலகூட்டும் மாயத்தாள் என எண்ணி அவளைப் பிரிந்தான் கோவலன். ஆனால் மாதவியோ 'மாலை வாராராயினும் காலை காண்குவம்' எனப் பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்.

அடுத்து அவன் நினைவாகவே இருந்து திருமுகங்கள் இரண்டினை எழுதி முறையே வசந்தமாலை வாயிலாகவும். கௌசிகன் வாயிலாகவும் அனுப்புவதினின்று அவள் உள்ளத்தை உணர்கின்றோம். தன்னைக் கோவ லன் மறந்தாலும், தான் அவனை மறக்கமாட்டாத மாண்புடன் விளங்கினாள். இறுதியாகத் தானும் துறவுக் கோலம் பூண்டு தன் மகளையும் துறவுபூணச் செய்தாள் என்றால் மாதவியின் மாண்பையும். மனத் திண்மையையும் என்னென்பது?

துறவிலே பிறந்த காப்பியம் :

அங்ஙனமின்றித், தன் தாய் சித்திராபதி கூறியதுபோன்று தன் குலத் தொழிலுக்கேற்ப (கோவலன் பிரிந்தபோது) கவலைப்படாது வேறு ஒருவரை நாடியிருக்கலாம். ஆனால் அவள் உள்ளம் அவனையே நாடியது. நாளும் நினைந்துருகி, அவனிறுதி கண்டவிடத்து அனைத்தையுமே துறந்தாள். தன்னைத் துறந்ததோடு அமையாது அவன் வாயிலாகப் பிறந்த மணிமேகலை யையும் இளமையிலேயே துறவுபூணச் செய்தாள். அங்ஙனம் செய்திரேல்

அம் மணிமேகலைபற்றிய காப்பியம் - **மணிமேகலை** தோன்றியிருக்கவே முடியாது. மணிமேகலை துறவின்றேல் சாத்தனுர் அவளைப்பற்றிய அரிய காப்பியம் யாத்திருக்க இயலாது. எனவே மாதவியின் 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டாத' பண்பே மணிமேகலை தோன்றக் காரணமாயிற்றென்க.

இருவர் பண்பும் இரட்டைக் காப்பியமும் :

இதுகாறும் கண்டவற்ருல் கற்பின் செல்வி கண்ணகியின் 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டாத பண்பே' **சிலப்பதிகாரம்** தோன்றக் காரணமாய் அமைந்தது. அத்தகைய அரியபண்பு மாமலர் நெடுங்கண் மாதவியால் மிளிர்ந்தமையாலேயே மற்ஞெரு காப்பியமாம் **மணிமேகலையும்** உடன் தோன்றிற்று எனலாம். இங்ஙனம் இருவர் பண்பும் இருபெருங் காப்பியங்களைத் தோற்றுவிக்கக் காரணமாய் அமைந்தது. எனவேதான் **இரட்டைக் காப்பியங்கள்** என நாம் இன்று அழைக்கும் அரியபேறும் பெற்ருேம். இரட்டைக் காப்பியங்களை எண்ணும்போதெல்லாம் இவ்விரு பெரு மாதர்களின் இனிய பண்பினையும் எண்ணி மகிழ்வோமாக.

இருவரின் நிலைதான் இங்ஙனம் என்று எண்ண வேண்டா. கதையில் வரும் மற்ருேரும் இங்ஙனமே தங்களை மறந்த கோவலனை எண்ணி எண்ணி ஏங்கி நிற்கின்றனர். கோவலன் கொலையுண்ட நிலை கேட்டவுடனேயே, கோவலன் தாயும், கண்ணகி தாயும் உயிர் துறக்கின்றனர்; மாசாத்துவானும், மாநாய்க்கனும் துறவு பூணுகின்றனர்; இடைக்குல மூதாட்டியாம் மாதரிகூட இடையிருள் யாமத்து எரியகம் புகக் காண்கின்ரேும்; கவுந்தியடிகளும் உண்ணு நோன்பிருந்து உயிர் துறக்கின்ருர் எனின் இவர் தம் அருள் உள்ளத்தை என்னென்பது ? இங்ஙனம் எல்லோரும் கோவலன் கண்ணகிபால் 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' என்ற பண்பைக் கொண்டுள்ளமையாலோ என்னவோ ஒரு பிணைப்பு சிலம்பைச் சிறந்தோங்கச் செய்கின்றது.

அறம் :

சிலப்பதிகாரம் மூன்று நெறிகளை எடுத்தோதுவான் வேண்டி எழுந்ததென்பர். அம் மூன்றில் ஒன்று, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்ருக அமையும் என்பதாகும். ஆம் ! அறத்தை மறந்தான் பாண்டியன்; ஆனல் அறத் தெய்வம் அவனை மறக்கவில்லை. தன்னைப் பாண்டியன் மறந்தாலும் தான் பாண்டியனை மறக்காது கூற்ருக அமைந்து அவனுயிரைக் கொண்டேகியது. அறமும் தன்னை அறவே மறந்த பாண்டியனைத் தானும் மறந்திருந்தால் பாண்டியன் உயிர் துறக்கவோ, கண்ணகியால் மதுரைப் பேரூர் தீ முறை செய்யப்படவோ நேர்ந்திராது; காப்பியமும் சீர்பெற அமைந்திராது. எனவே அறத்தின் திறத்தான் சிலப்பதிகாரமும் அழகுற அமைந்தமை கண்கூடு-

பண்டை வினையும் பண்புடைக் காப்பியமும் :

அறத்தைப் போன்றே ஊழ்வினையும் தன்னுடைய செயலைத்திறம் படச்செய்துள்ளது. கண்ணகி ஊழ்வினை என ஒன்றிருப்பதையே மறந்தாள்; கோவலனும் அப்படியே, மாதவிகூட மறந்தாள். ஊழ்வினையின் படியே உலகம் இயங்குமாற்றை இம்மியளவும் எண்ணுதிருந்தனர் இம் மூவரும். ஆனல் தன்னை அவர்கள் மறந்தாலும் ஊழ்வினை தன்னுடைய வேலையைச் செய்தே சென்றது. கண்ணகியிடமிருந்து கோவலனைப் பிரித்து மாதவியிடம் சேர்த்தது; பின்பு மாதவியிடமிருந்து பிரித்துக் கண்ணகியிடம் சேர்ப்பது போன்றமைந்து இறுதியிலே இவ்வுலகினின்றே பிரித்தது. ஊழ்வினையின் ஒவ்வொரு செயலாலேயே கதையும் நிகழ்கின்றது: காப்பியமும் நிகழ்கின்றது. எனவே ஊழ்வினைகூட, தான் இருப்பதை அடியோடு மறந்தவரையும் தான் மறவாது - நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால் என்ற எண்ணத்தில் இலைமறை காய் போல் இருந்து காப்பியத்தை இயக்கிச் செல்கின்ற திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற் பாலது.

இறுவாய் :

இதுகாறும் கண்டவற்றல் பண்பிற் சிறந்தவர் தமிழர் என்றும், அத்தனிப் பண்பினைக் கண்ட தமிழ்ப் புலவோர் அவ்வப்போது பண்பினைப் பாட்டில் வைத்து மகிழ்ந்தனர் என்றும், அம்முறையில் சேரநாடு தந்த செந்தமிழ்க் காவலராம் இளங்கோவும் தாம் கண்டுணர்ந்த இத்தனிப் பண்பை ஏட்டிலே தீட்டியதோடமையாது பண்பின் அடிப்படையாகவே ஒரு பைந்தமிழ்ப் பெருங்காப்பியத்தை அமைத்து அருளிச் சென்றுர் என்றும், அந்த 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டாத' பண்பு கண்ணகியாலும் மாதவியாலும் ஒளிர்ந்தமையே இரட்டைக் காப்பியங்கள் எழ அடிப்படைக் காரணமாயிற்று என்றும், ஊழ்வினை, அறத்தெய்வம் இரண்டும் கூட இப்பண்பினை மறவாது செயலாற்றின என்றும், இப்பண்பால்தாம் செந்தமிழ்ச் சிலம்பும் நம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் சிலம்பாக அமைகின்றது என்றும் கண்டோம். இதனை இளங்கோவே மாதவி வாயிலாகக் **கானல் வரிப்** பகுதியில் குறிப்பிடுவதும் காண்க.

தம்முடைய தண்ணளியுந் தாமுந்தன் மான் தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டு அகல்க;
அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்

(கானல்வரி-32)

நம்மை மறந்தாலும் - நாம் மறந்தாலும் - நம் நெஞ்சம் மறக்க மாட்டாத காப்பியத்தை நாமும் நெஞ்சாரப் போற்றிப் பரவுவோமாக.

வாழ்க பண்புடைக் காப்பியம் ! வளர்க அப்பண்பு !!

⁖ ⁖ ⁖ ⁖ ⁖

செய்குவீர் இன்றே !

-[துரை. மாணிக்கம்.]-

—:0:—

முத்துக் கொழித்ததும் யாங்கள் - கடல்
மீதில் மரக்கலம் விட்டதும் யாங்கள்!
சித்துப் பயின்றவ ரெம்மோர் - பெருஞ்
சீருஞ் சிறப்பொடும் வாழ்ந்தவர் முன்னோர்!
மெத்த இலக்கியங் கண்டோர் - என
மேன்மைப் புகழுரை பற்பல கூறி
எத்தித் திரிந்திடு வோரே - இவ்
வேழை இயம்பிடும் நல்லுரை கேட்பீர்,

தாயை அழுதிட வைத்தீர் - அவள்
தண்டமிழ் நாவிற் றுளைபல செய்தீர்
பேயை அரியணை வைத்தீர் - அவள்
பேசும் இழிமொழிக் காடவுஞ் செய்தீர்
காயைக் கனியென்று கொண்டீர் - கருங்
கல்லை மலரென்று நுகரவுஞ் செய்தீர்
ஆயுந் தமிழ்ப்புல வோரை - நகை
யாடி வருகுவீர் ஏதுரை சொல்வேன்

புன்மை மொழிபல சொல்வீர் - பல
பொய்மைச் செயல்பல நாளுமே செய்வீர்
மென்மை உளத்தினை விட்டீர் - அறம்
மேவும் பணிகளின் மேன்மை மறந்தீர்.
வன்மைத் திறங்களு மின்றி - நல்
வாழ்வுப் பயன்களும் உயர்வது மின்றி
முன்மைத் தமிழரைப் பற்றி - வாய்
முரசறைந் தேசெயல் முற்றுந் துறந்தீர்!

கற்றவ ருஞ்செய லற்றார் - எனிற்
கல்வியில் லாதவர் விளைவெது காண்பார்?
பெற்றவர் காத்திடாப் பிள்ளை - பிறர்
பேணுவ தால்வளர்ந் தோங்கிடல் இல்லை!
பற்றுக் குறைந்தது நாட்டில் - தமிழ்
பண்டைத் திறத்தினில் சிதைந்தது முற்றும்
உற்ற புல்வரை நாடி - தமிழ்
உய்ந்திடும் வகையினுக் கானவை செய்வீர்!

(தொடர்ச்சி 22-ஆம் பக்கம் பார்க்க)

கல்வி இயக்குநரின் கண்ணீர்.

✶

குருடன் ஒருவன் இறந்து கிடந்தான். அவ்வழியே சென்ற மருத்துவர் ஒருவர் அவன்பால் இரக்கங் காட்டி, அவனருகிற் சென்று அவன் உடலைத் தொட்டுப் பார்த்து, அவன் இறந்துபோக வில்லை யென்றும் பெரு-மயக்கத்தால் வீழ்ந்திருக்கின்றான் என்றும், ஆனால் அப்படியே இருப்பின் சில நொடிகளில் இறந்து விடக்கூடுமென்றும் அங்கிருந்தவரிடம் கூறித் தம்மிடம் உள்ள மருந்துகளிற் சிலவற்றைக் கலக்கி அவன் வாயிற் பருக்கியும், ஊசி வழியாகச் சிறிது மருந்தை உள்ளுக் கிறக்கியும் மருத்துவஞ் செய்தார். சில நொடிகளில் அங்கிருந்தார் யாவரும் வியப்புறுமாறு குருடன் அசைந்து கொடுத்தான். இன்னுஞ் சிறிது நேரங்கழித்து எழுந்து உட்கார்ந்தான். தனக்கு உயிர் தந்து காத்த அம்மருத்துவரைக் கண்களால் கண்டு மகிழாமைக்கு மிக வருந்திக் கைகளால் வழிபட்டு, வாயால் வாழ்த்தினான். மருத்துவர் அவன்பாற் கழிபேரிரக்கங் கொண்டு அவனைத் தம்மொடு அழைத்துச் சென்றார். பின்னர் தாமறிந்த ஒரு கண்மருத்துவரிடம் அவனைக் காட்டி அவன் கண்களை ஆய்ந்து காணுமாறு வேண்டினார். அவரும் அக்குருடன்-பால் இரங்கி அவன் கண்களைப் பார்த்து, அக்கண்களை அகற்றி, அவ்விடத்தில் வேறு கண்களைப் பொருத்தினால் அவன் காணவியலும் என்றும், அவ்வாறே தம்மாற் செய்யக் கூடுவதற்கான ஒரு பெருந்தகையாளனின் கண்கள் தம்மிடம் உள்ளனவென்றுங் கூறி அவனுக்கு அக்கண்களைப் பொருத்துவதாகவும் கூறினார்.

அப்பொழுது அக்குருடன் கொண்ட உவகையினை எந்த அளவு கருவியால் அளவிட்டுக் காட்ட வியலும்? ஓரிரு மாதங்களில் அக்குருடன் நீல வானையும் நெடுநீர்க் கடலையும், கோல நிலவையும் குளிர்மரக்காவையும் கண்டு கண்டு கண்களால் இன்பம் உண்டு உண்டு உளங்களித்திருந்தான்.

இறக்குந் தறுவாயிலிருந்த அவனைக் காத்தவர் அவனுக்கு உயிர் கொடுத்தவர் அல்லரோ?

கண்களற்றிருந்த அவனுக்குக் கண்கள் தந்து காத்தவரை அவன் எவ்வாறு மறக்கவியலும். அவன் கண்டு மகிழும் காட்சி ஒவ்வொன்றிலும் அப்பேரருள் படைத்த கண் மருத்துவரின் கவினுருத் தோன்றுதோ?

உணவின்றி மாளும் ஒருவனுக்கு உணவு கொடுப்பார் உயிர் கொடுத்தவராவார்.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று ஆன்றோரும் அத்தகையோரை உவந்தேத்தினர்.

அவ்வாறே கல்வியற்ற ஒருவனுக்குக் கல்வி தருவோர் கண் தந்தோரே அன்றோ.

'கண்ணுடையரென்போர் கற்றோர்' என்று சான்றோரும் கூறினரே! அக் கல்வி நலமீவார் கண்ணீவோரே!

இனி உண்டியுங் கொடுத்துக் கல்வியும் தருவோர், உயிருந் தந்து கண்களும் தந்த மருத்துவர்போல் அருள் நெஞ்சம் உடைய மேலோர் என்பதையும், அவ்வாறு அப்பயன்களைப் பெறுவோர் உயிர்பெற்றுக் கண்களையும் பெற்ற அக் குருடனைப்போல அகமகிழ்ந்து வாழ்வுப்பயனெய்துவர் என்பதையும் கூறவும் வேண்டுமோ?

நம் மாநிலக் கல்வி இயக்குநர் திரு. **சுந்தரவடிவேலு** அவர்கள் அருள் நெஞ்சோடு ஊர்ப் பிள்ளைகட்கு உணவுங் கல்வியும் தந்து வாழ்வதே தம் வாழ்வுப் பயன் என்று கருதும் பெருந்தகையாளர். அவரை எவ்வாறு போற்றினும் ஈடாகாது.

இத்தகைய வண்மையாளர் ஊர்ப்பிள்ளைகளையே தம் பிள்ளைகளாக எண்ணி வருங்கால், தம் ஒரே பிள்ளையான பத்தே அகவையுள்ள வள்ளுவன் என்ற தெள்ளு தமிழ்ப் பேசும் வல்லானை இழக்க நேர்ந்தது கேட்டு நெஞ்சு துணுக்குற்றோம். இப் பேரிடியுண்டு தாளாது துடிக்கும் அப்பெருந்தகையாளர்க்கும் அவரது துணைவியார்க்கும் உறவினர்க்கும் எம் மாளாத வருத்தத்தைக் கூறிக் கொள்கின்றோம்.

வள்ளுவனே நின்வாய் வளர்ந்த தமிழ்மணத்தை
உள்ளுவமே நாளும் உவந்து. - ஆசிரியர் -

(செய்குவீர் இன்றே தொடர்ச்சி)

செந்தமி ழேஉயிர் மூச்சு - அதன்
சிறப்பும் உயர்வுமே நம்பெரும் பேச்சு!
செந்தமி ழேஉயர் வாழ்வு - அது
சிதைந்திடில் நாமெல் லவர்க்குமே தாழ்வு!
முந்தை வளம்பல கூறி - வெறும்
மூங்கைச் செயல்பல கூறிடுவோரே,
எந்தமிழ் காக்கமுன் நிற்பீர்! - அதற்
கேற்ற பணிகளைச் செய்குவீர் இன்றே!

∴ ∵ ∵

சாக்ரடீசு (469—399 கி. மு.)

மக்கள் அறியாமையிலும், ஒழுங்கின்மை என்னும் இருளிலும் மூழ்கிக் கிடந்த நேரத்தில், "ஏதன்சு" நகரில் - ஒளிவிளக்காகத் தோன்றியவன் 'சாக்ரடீசு'. அறிவழகு நிரம்பப்பெற்ற அவன் உடலழகு சிறிதும் இல்லாதவன். அழுந்திய தட்டை மூக்கும், முன் தள்ளிய வயிறும், அம்பு போன்ற கூரிய விழிகளும் கொண்ட எளிய உருவினன். அவன் எழுதியதாக எந்த நூலும் வெளிவரவில்லை. அப்படியிருந்தும் அவன் உலகின் மிகச் சிறந்த மெய்யறிவாளன், ஏதென்சு பெற்றெடுத்த பேரறிஞர்களுக்குள் முதன்மையானவன் என்பதை நாம் அறிகிறோம். அவன் பெயர் உலகெங்கினும் நன்மதிப்பைப் பெறுகின்றது.

அவனது அறிவின் மேம்பாட்டினால் அவன் குன்றிலிட்ட விளக்காகத் திகழ்ந்தான். பிறர் வாழ்க்கைக்கு வழிகாட்டிய அவனது நேர்மை அவனுடைய இறுதிக்கு வழிகோலியது. நல்ல மாந்தரை உலகம் வாழ விடுவதில்லை. உலக வரலாறு என்னும் கருந்துணியினூடே தங்க இழை போன்றது அவன் வாழ்க்கை.

அவனது நெருங்கிய நண்பர்களான "பிளாட்டோ" (Plato) செனோபன் (Xenophon) முதலியவர்களின் எழுத்துக்களிலிருந்து அவனைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம்.

பிளாட்டோ, தான் எழுதிய நாடக உரையாடல் நூல்களில் சாக்ரடீசை முதன்மையான நடிகனாக உலவவிடுகிறான். அந்தப் பேரறிஞனின்பேச்சுத் திறனும் தன் கொள்கையை நிலைநாட்ட, கைக்கொண்ட சொல் வன்மையும் உண்மையைத் தெளிவுறுத்துவதற்காகத் தானாகவே கேட்டுக் கொண்ட வினாக்களும், அவற்றின் விடைகளும் வாழ்க்கை, சாவு இவைபற்றிய எண்ணங்களும் அந்த உரையாடல் நூல்களில் தெளிவாகக் காணக் கிடக்கின்றன.

அவன் ஒரு சிறிய வட்டத்தினுள்ளிருந்துதான் அறிவு முழக்கம் செய்தான். ஆனால் அந்த முழக்கம் இன்னும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

உலகத்திற்கே ஒளி வீசிய அந்த அறிவு விளக்கு கி. மு. 469-ஆம் ஆண்டில் **'ஏதன்சு'** நகரில் ஏற்றிவைக்கப்பட்டது. அக்காலத்தில் கிரேக்க நாடுகளுக்குள்ளே 'ஏதன்சு' தான் மிகப் புகழும் வலிமையும் பெற்று விளங்கியது. கல்வியும் கலைகளும் வணிகமும் அதற்குமுன் என்றும் இல்லாதவாறு செழித்தோங்கியிருந்தன. ஏதன்சின் பொற்காலம் என்று புகழப்பட்ட அந்த நாளில்தான் சாக்ரடீசு பிறந்தான். அவன் தந்தை கருங்

கற்களுக்கு உருவேற்றும் ஒரு சிற்பி. அவனுக்குப் பிறந்த இவனோ மக்கள் இனத்தின் சொரசொரப்பான மேடுபள்ளங்களை மெய்யறிவென்னும் சிற்றுளி யால் ஒழுங்குபட வழவழப்பாக்கித் தந்த ஒரு சொற் சிற்பியாக விளங்கினான். சாக்ரடீசின் இளமைக்காலத்தில் அவன் தந்தையின் சிற்பவேலை அவனைப் பிடித்திருந்தது. எனினும் சில காலத்திற்குப்பின் தாயின் தொழிலான மருத்துவத்தைப் பின்பற்றினான். ஆனால் இவன் உடற் பிணியாளர்களுக்கு மருத்துவம் செய்வதை விடுத்து அறியாமைப் பிணியாளர்களுக்காகவே பாடு பட்டான். இவ்வாறு அவனே வேடிக்கையாகக் கூறிக் கொள்வதுண்டு.

ஏதன்சின் மற்ற குடிகளைப்போலவே இவனும் போர்ப்படையில் சேர்ந்து நாட்டுப் பணிபுரிந்தான். ஒரு போரில் "அல்சிபியாடிசு" என்ற பெருமகனின் உயிரைக்காத்தான். அவன் பிற்காலத்தில் சாக்ரடீசின் மாணவருள் ஒருவனானான். 'டெலியம்' 'ஆம்பிபோலிசு' முதலிய போர் களில் முன்னின்று தன் திறமையைக் காட்டி, யாவரின் பாராட்டையும் பெற் றான். போர்ப்படையிலிருந்து விலகிய பின்னர் எஞ்சிய வாழ்க்கையின் பெரும் பகுதியினைச் சாக்ரடீசு பேசியே கழித்தான். அன்று பேசிய அந்தப் பேச்சு இன்றுவரை, பேரறிஞன் என்றும் மெய்யறிஞன் என்றும் உலகோர் கொள்ளத்தக்க பெரும்புகழை அவனுக்குத் தேடித் தந்தது.

மிகவும் எளிமையான உடையணிந்துகொண்டு காலை வேளைகளில் ஏதன்சு நகரத் தெருக்களிலும் திறந்த வெளிகளிலும் அலைந்துகொண்டிருப் பான், கோடையில் காய்வான், மழையில் நனைவான். பனியில் உடல் குளிரக் குளிர அலைவான். அவன் உடலுக்குக் குப்பாயமோ (Coat) காலுக்கு மிதியடியோ அணிந்ததில்லை. ஏழ்மையைத் துளியும் பொருட்

தமிழ்நாட்டின் கண் உள்ள அரசியல் கட்சிகளிற் சில நல்ல கொள்கை உடையனவாயும், சில நல்ல தலைவரை உடையனவாயும், சில பெருவாரியான உறுப்பினரை உடையனவாயும், ஒன்றிரண்டு பெருஞ்செல்வம் படைத்தனவாயும், மிகச்சில மக்களிடம் செல்வாக்குப் பெற்றனவாயும், இன்னுஞ்சில செல்வர் தம்மிடம்மட்டும் பெருமை யுற்றனவாயும், உழவர் தம்மிடமே மதிப்புப்பெறத் தக்கன ஒருசில வாயும், உள்ளன. ஆனால் ஒன்றிரண்டில் தவிர மற்றையவற்றில் உள்ள தலைவரும் உறுப்பினரும் மக்கள் கொள்ளத் தக்கன என்று ஆயிரமுங் கூறுகின்றனரே யொழிய அவர் கூறிய வழி நின்று காட்டற்கு அவர்தம்முள்ளேயே ஒருவருமில்லாதிருப்பது.......

ஒரே ஒரு குறை

படுத்தமாட்டான். அது தனக்குக் கிடைத்த வாழ்வாகவேஎண்ணி அமைதியாக ஏற்றுக் கொண்டான். அறிவையும் உயிரையும் பெரிதாக எண்ணி அலைந்த அவன் பிற எளிய பொருள்களைப்பற்றி பொருட்படுத்தாதது இயல்பே.

அவன் பட்ட துன்பங்களை அண்டிபோஸீன் என்பவன் எழுதும்போது "ஒரு அடிமையால் கூட அவன் பட்ட தொல்லைகளைத் தாங்க இயலாது. அந்த அடிமைகூட அத்துன்பத்தைக்கண்டு அஞ்சி ஓடியிருப்பான்" என்று குறிக்கிறான்.

இத்தகைய தொல்லை அவனை அச்சுறுத்தவில்லை. அவன் அவற்றைக் கண்டு அஞ்சி ஓடி ஒளியவுமில்லை. ஏதன்சு நகர எல்லைக்கு வெளியே சிற்சில காலங்களில் அவன் சென்றதுண்டு. நாடு நகரங்களைப் பற்றியோ, அரசர் செல்வர் தம்மைப்பற்றியோ அவன் கவலைப்பட்டதில்லை; பொதுவான உலக மாந்தரே அவன் பேச்சிற்கும் எண்ணத்திற்கும் ஆளானவர்.

'கறந்த பால மடி புகாது' என்பது பழமொழி. அதுபோல் நாம் பேசுகின்ற சொற்களும், நம்மால் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாதனவாகும். எழுதுவதையாகிலும் அழித்து மீண்டும் எழுதமுடியும். பேசுவதையோ அழித்துவிட முடியாது. இதனாலேயே, பேசப்புகுமுன் இன்ன சொற்களையே பேசுதல் வேண்டும் என்று தெளிதல் வேண்டும். பேச்சு பிறர்க்கு துன்பத்தையும், இன்பத்தையும் எளிதே உண்டாக்கி விடுவதாகும். பயனில்லாத சொற்களைப் பேசுதல் மடமை மட்டுமன்று; கீழ்மையுமாகும். அத்தகையவன் கனியிருப்பக் காயைக் கவர்ந்தவனாவான் என்றியம்புகின்றார் வள்ளுவர். நாம் பேசும் பேச்சுக்கள் இனிமையாகவும், பொருளுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாத வெற்றுரைகளைப் பேசும் தீய பழக்கத்தை இன்றிலிருந்தாவது

தாம் செய்வன வெல்லாம் சரியென்றும், செய்யாது விடுவன வெல்லாம் தீதென்றுமே ஒவ்வொருவரும் எண்ணுகின்றார். நாம் செய்கின்ற நல்லஒருசெயல் யாரேனும் ஒருவருக்கு தீங்காக முடியலாம். கூடியவரையில் எல்லோர்க்கும் நல்லதாக முடிகின்ற செயல்களையும், அவற்றின் வித்துக்களாகிய எண்ணங்களையுமே ஒழுக்கம் என்றனர் ஆன்றோர். அறநெறியில் ஈடுபடுவது பிறர்க்கு நல்லதைச் செய்வதல்ல. பிறர்க்குக் கெடுதலைச் செய்யாமல் இருப்பதேயாகும் என்று அறநூல்கள் கூறுகின்றன. பிறர்க்குக் கெடுதல் செய்யாதவன் மண் போன்றவன் என்றும், பிறர்க்கு நல்லது செய்பவன் மழை போன்றவன் என்றுங் குறிக்கலாம்.

இத்தகைய அறநெறிகளைச் செய்தற்கு எத்தகைய பொருட் செலவும் வேண்டாம். பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று என்றே வள்ளுவரும் கூறுகின்றார். இப் பொய்யாமையை இன்றிலிருந்தாவது

மக்கள் கூடும் சந்தை வெளிகளையும், தெரு முனைகளையும் தன் சொற்பொழிவு மேடைகளாக அவன் ஆக்கிக் கொண்டான். அங்குப் போவோர் வருவோரையும் தெருவோரங்களில் ஒன்றிக் கிடப்போரையும் தன் உயர்ந்த பேச்சைக் கேட்கவந்த பெருங்கூட்டமாக எண்ணிக்கொண்டான். இவன் பேச்சை, உயர்ந்தவர், தாழ்ந்தவர், கற்றவர், கல்லாதவர் என்ற வேறுபாடு இன்றி யாவரும் விரும்பிக் கேட்டனர். அவன் தனக்குத் தானே வினுக்களை ஏற்படுத்திக்கொண்டு அதற்குரிய விடைகளை அக் கூட்டத்தின் முன் உரக்கக் கத்தினன். அவனது கேள்விகளிலும் கூறும் பதில்களிலும் சிறுவரும் புரிந்துகொள்ளத்தக்க எளிய விளக்கங்களைக் காணலாம். ஒழுக்கமே அவனது வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. ஒழுக்கத்தை உயிர் என்றுன். அதையே அறிவு என்றுன். அதைக் கொண்டவரையே மக்கள் என்று மதித்தான். கல்வி கேள்வியும் செல்வமும் சீர்மையும ஒருவனை உண்மையான மாந்தனுகை ஆக்கிவிட முடியாது. ஒழுக்கம், நேர்மை என்ற உயர்ந்த பண்புகளே ஒருவனை உண்மையான மாந்தனுக்கமுடியும் என்பதே அவன் மக்களுக்குக் கூறிவந்த உயர்ந்த எண்ணங்களாகும்.

அவன் வாழ்வின் சிறு பகுதியைப் பொது வாழ்க்கையிலும் ஈடுபடுத்தியிருந்தான். அக் காலங்களில் அவன் நேர்மையின் முகட்டினின்று அணுவளவும் சறுக்கியதில்லை. மனத் திண்மையும் செயலுறுதியும் உள்ள அவனைப் போன்றவராலேயே அவ்வாறு இருத்தல் கூடும்.

ஒருநாள் அவன் நகராண்மை உறுப்பினனுக இருந்த போது சில சேனியப் படைத்தலைவர்கள்மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது. மக்களின் உறுதிப்பாட்டின்படி அப்படைத்தலைவர் கொலைத்தண்டம் விதிக்கப்பெற்றனர்.இதைக்கழக உறுப்பினர் யாவரும் ஒப்புக் கொண்டனர். அப்போது கூட சாக்ரடீசு அதைத் தடுத்தான், அவனை எதிர்த்த மக்களின் குரலுக்கு அவன் அஞ்சவில்லை. நேர்மைக்கு அவன் பாடுபட்டான். கி. மு, 404 -ல் ஏதன்சின் ஆட்சிப்பொறுப்பு முப்பது பெயரைக்கொண்ட ஒரு குழுவின் கையில் வந்தது. அப்போதும் சாக்ரடீசின் நேர்மையை அறிந்து கொள்ள ஒரு சூழல் உண்டானது. நேர்மையற்ற முறையில் சிலரைச் சிறை செய்யுமாறு அவன் ஏவப்பட்டான். ஆனல் சாக்ரடீசு அதை மறுத்தான். அது தன் உயிருக்குக் கேடு செய்யும் என்பது தெரியும். ஆனல் அந்நிலையில் அக்குழுவின் ஆட்சியே கவிழ்ந்து போக அவன் உயிர் பிழைத்தது.

சாக்ரடீசு இறப்புக்கு அஞ்சவில்லை. தன் உள்ள நெறியையும் இயற்கை நிகழ்ச்சிகளையும் அவன் நம்பினன். ஏதன்சு மக்கள் வழிபட்டு வந்த பழங்கடவுள்களை அவன் நம்பவில்லை. அந்தப் பழங் கொள்கைச் சமயங்களிலும் அவன் மூழ்கியிருக்கவில்லை. ஒவ்வொரு மாந்தனிடமும் இருக்கவேண்டிய நேர்மையும், ஒழுங்குமே அவனது சமயமாக இருந்தன.

அவனிடம் நாம் காண்கின்ற பேராற்றலெல்லாம், அவன் இருபத்து நான்கு மணிநேரமும் ஆழ்ந்த எண்ணங்களில் மூழ்கிக் கிடந்தது தான். தன் உளத்திற்கு நேர்மை என்று பட்டதை அவன் செய்ய என்றும் தயங்கியதில்லை. சாக்ரடீசு பொதுவாழ்விலேயே தொடர்ந்து ஈடுபட்டு மக்கள் ஒவ்வொருவரையும் மகிழ்விக்கக் கூடவில்லை. அவனது நேர்மையான சிறந்த பேச்சுக்கள் சிலர் தம் மனதை உருத்தின.

கி. மு. 423ல் "அரிக்டோபான்ஸ்"என்ற நகைச்சுவை நாடக ஆசிரியன் தான் எழுதிய "முகில்கள்" என்ற நாடகத்தில் சாக்ரடீசை எள்ளி நகையாடுகிறான். அதில் சாக்ரடீசு ஒருஅரைக்கிறுக்கனுவும் மெய்யறிவென்னும் கடை விரித்துக் கொண்டு இளைஞர்க்குப் பொய்யையும் தகுதி அற்ற எண்ணங்களையும் ஓயாமல் பறைசாற்றும் கிழவனுகவும் காட்டப்பட்டுள்ளான். நாடக ஆசிரியனின் இத்தகைய செயல் நகரச்செல்வர் பலரின் தூண்டுதலால் உருவானதாகும். ஆனல் இந்தச்சூழ்ச்சியினுல் சாக்ரடீசின் புகழ் குன்றிவிடவில்லை.

புலவர் ஓம்பிய நாடு.

இற்றைக்குப் பத்தாயிர ஆண்டுகளுக்கு முன்னமே நாகரிகத்தில் மிக்கோங்கிய **எகிபதியரும்** அவரது வாழ்க்கையும் இப்போதெங்கே? இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்கு முன்னரே நாகரிகத்திற் சிறந்தாராய் வாழ்ந்த **சாலடியர், பாபிலோனியர், மெக்சிகர்** என்னும் மாந்தரெல்லாம் இப்போதெங்கேயுளர்? இற்றைக்கு நாலாயிர ஆண்டுகட்கு முன்னரே நந்தமிழ் மக்களுடன் வந்துபோராடிய **ஆரியரும்** அவர்தம் வழக்கவொழுக்கங்களும் இப்போதெங்கே? இற்றைக்கு இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னே உயர்ந்த நாகரிகம் வாய்ந்தாராய் விளங்கிய **கிரேக்கரும்** இரண்டாயிர ஆண்டுகட்கு முன் மேனுடுகளை யெல்லாந் தமது செங்கோலாட்சியில் வைத்து அரசு புரிந்த **உரோமரும்** இப்போ தெங்கேயுளர்? இவரெல்லாந் தாம் இருந்த விடத்திலல்லாது மறைந்து போக, இவர்கள் வழங்கிய மொழிகளெலாம் நூல்வழக்கின்றி உலகவழக்கில்லாது இறந்துபோக, இவர்கள் எடுப்பித்த எவ்வளவோ மிகப்பெரிய எவ்வளவோ மிக அழகிய அரண்மனைகளும், கோயில்களும், மாளிகைகளும் எல்லாம் இடிந்து பாழாய்க் கிடக்க, **எகுபதியர், சாலடியார், பாபிலோனியர்,** முதலான அச்சீரிய மக்கட்கெல்லாம் நாகரிகத்தைக் கற்பித்த தமிழர்களும், அவர் வழங்குந் தமிழ்மொழியும் அவரெழுப்பித்த திருக்கோயில்களும் எல்லாம் இன்றுகாறும் பழுதுறுமல் நிலைத்திருந்தால் என்னை? என்று ஆராய்ந்து பார்க்குங்கால் அது முற்காலத்திருந்த தமிழ்ப்புலவர்தம் நுண்ணறிவின் திறத்தையும் அவர் அதனுல் மடியாத் ஆள்வினை மேற்கொண்டு தமது தமிழ் மொழியையுந் தந்தமிழ் மாந்தரையும் விழிப்பாய் ஓம்பிய வகையையும் நன்கு தெரிவிக்கின்றது.

—மறைமலையடிகள்—

இவன் காலத்திலேயே வாழ்ந்த ஓர் புலவன் இவனைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறான்

"நான் சாக்ரடீசை வெறுக்கிறேன். அதற்குக்காரணம் இதுதான். அவன் உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களைப்பற்றியும் ஓயாமல் எண்ணி உண்மைகாண்கிறான். ஆனால் தன் சோற்றுக்கு வழி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஒரு நொடியும் எண்ணவில்லை. அதைமறந்தே விடுகிறான்."

எப்பொழுதும் மக்கள் அவன் சொற்பொழிவைக்கேட்க வேட்கையுற்றிருந்தனர். அவர்தம்முள் சிலர் அவனது அறிவையும் பேச்சுத் திறனையும் வியந்து அவற்றைத் தாமும் கற்றுக்கொள்ள முயன்றனர். சிலர் அவன் அறிவுரைகளின்படி தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்பினர்.

(இசை 5-ல் முடியும்.)

சினைப் பெயர்க் காரணங்கள்.

(ஞா. தேவநேயப் பாவாணர்.)

தலை : கடை, முடிவு. இருதலைப் பிறை 'இருதலைக்கொள்ளி' என்பவற்றை நோக்குக.

உடம்பின் மேன் முடிவுறுப்பு தலை. தலைமைப் பொருள். தலை என்னும் சினைப் பெயரினின்று தோன்றியது.

அகடு : உள்: உள்ளிடத்துள்ள வயிறு அகம் - அகடு.

மூக்கு : (முகத்தில்) முன்னிருப்பது, முகு - முக்கு - மூக்கு.
முகு - முகம் - முகர். முகுத்தல் - முற்படுதல், தோன்றுதல்.
முகு - முகிழ். முகர் - முகம், மூக்கு. முகர்தல் - மோத்தல்.
முகம் - முக-மோ. முகம் - முகர் - மோர்.

கை : < கெய் < செய் - செய்யும் உறுப்பு. பக்கம் என்னும பொருள். கை என்னும் சினைப் பெயரின் வழிப் பொருள். Chey (தெலுங்கு) - கை.

அரை : அருகி (சிறுத்து) இருப்பது. அரு - அரை. இடை - இடுகி (ஒடுங்கி) இருப்பது. இடு - இடை .

அரை உடம்பில் அரையளவில் இருப்பதால் பாதி என்னும் பொருள் பின் தோன்றியது.

கால் < கோல் - கம்பு, கழை, மரத்தூண். கோல் - கால் - தூண்; தூண் போல் தாங்குவது. பந்தர்க்கால். ஆயிரக்கால் மண்டபம் என்னும் வழக்கை நோக்குக. $\frac{1}{4}$ என்னும் பொருள் முழங்கால் உடம்பில் காற்பகுதியாயிருப்பதால் தோன்றியது.

0 0 0



மலர்ப்பிணையல்.

[மாரி - அறவாழி.]

(பிறர் தவிர்ப்பத் தவிராது சிறு சண்டை நிகழ்த்தியவரை, பிறர் தவிர்ப்பத் தவிராதவாறு மலர்ப் பிணையலைப்போலப் பிணித்தது இயற்கை! குறுந்தொகைக் காட்சி யொன்றைப் பெருந் தொகையாக்கிக் காட்டி மகிழ்வைக் கூட்டுகின்றார் மாரி - அறவாழி. படிக்கையில் உள்ளம் விரிகின்றது.

- ஆ. ர்.)

"...கோதை!... கோதை!......"

"என் இப்படி அலறுகிறீர்? கோதைக்கு என்ன வந்து விட்டதாம்?..."

"அறிவுகெட்டவளே! ஓடிவா விரைவில். ஊம்! ஓடி வந்து பாரேன்..."

"அப்பப்பா! இன்னும் என்ன சின்னக் குழந்தைபோல வேடிக்கையும் விளையாட்டும்! ஒரு வேலையை உருப்படியாகச் செய்யவிடுகின்றீரா... என்ன புதுமையைக் கண்டுவிட்டீர் தெருவிலே?..."

உரிமை நிறைந்த சலிப்பும் அன்பும் குரலிலே இழைந்தோடக் கேட்டுக்கொண்டே வாயிலுக்கு வந்தாள் கோதை.

வாயிலில் நின்றிருந்த கணவன், குட்டுவன், அவளது கையைப் பிடித்துத் தன்னருகில் இழுத்து வைத்துக்கொண்டு கேட்டார்!

"அதோ பார்! அங்கே ஒரு இளைஞனும் இளம் பெண்ணும் போகின்றனர் பார்... அவர் யாரென்று தெ றதா?..."

"...வீதியிலே வருவோர் போவோரையெல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டிருப்பது தான் எனக்கு வேலையா?..."

"போதுமுன் விளையாட்டு! அந்த இளைஞன் யாரென்பது உனக்குத் தெரிகிறதா...?"

"தெரியவில்லையே! யார் அவர்?"

"நன்ருக உற்றுப் பார்! அவன் நெற்றியில் நீண்ட வடு ஒன்று இருக்கிறதே...இன்னுமா தெரியவில்லை?..."

"தெரியவில்லை'ங்க! யார் அவர்?"

அவள் கேள்விக்குக் குட்டுவன் விடை தரவில்லை...? அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனைக் கூப்பிட்டுத், தெருத் திருப்பத்தில் சென்றுகொண்டிருக்கும் அந்த இளைஞனையும் பெண்ணையும் தான் வரச் சொல்லுவதாகக் கூறி அழைத்துவருமாறு அனுப்பினுன்.

சிறுவன் சிட்டாய்ப் பறந்தான், சற்று நேரத்தில் அந்த இளம் காதலர்களும் உடன் திரும்பினர்.

இப்போது அந்த இளைஞனை நன்ருகப் பார்த்தாள் கோதை, அவனை எங்கோ பார்த்த நினைவு வந்தது. ஆழ்ந்து நினைத்தாள். அவனது நெற்றியிலிருந்த நீண்ட வடு அவனை அடையாளம் காண்பித்துக் கொடுத்தது. "ஆம்! அவன் சேரலாதனே! ஆனுல் அந்தப் பெண்?..."

அதற்குள் அவர்கள் இருவரும் குட்டுவனருகே வந்து நின்றனர். மகிழ்ச்சியின் மிகுதியால் கோதை குழந்தையானுள், சேரா...!" என்று உரக்க அழைத்தாள்.

சேரலா தனுக்குக் கோதையையும் குட்டுவனையும் தெரிந்துவிட்டது. முகத்திலே புன்னகையைப் படரவிட்டுக் கொண்டு அவர்க்குக் கை கூப்பி வணங்கினுன். குட்டுவன் ஓடிச் சென்று இளைஞனை அணைத்துக் கொண்டார். இளம் பெண் தன் காதலன் பின்னுல் ஒடுங்கி நின்ருள்.

ஆடவர் இருவரும் நலமுசாவிக் கொண்டனர், கோதை கேட்டாள், "ஏன் தம்பி! அந்தப் பெண் யார்?... உனக்கு இன்னும் திருமணமாகவில்லையே!"

"ஓ! தெரியாதா அக்கா உங்களுக்கு? அடடா! நான் தான் ஒருவருக்கும் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்து கொண்டேனே. ..... இவள் தான் என்...! ஏன் உங்களுக்கு இவளைத் தெரிந்திருக்கவேண்டுமே! நன்ருகப் பாருங்கள்..."

"இல்லையேதம்பி! தெரியவில்லையே!"

"என்ன அக்கா! அதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்! இதோ என் நெற்றியில் இருக்கிறதே வடு. உங்கள் வீட்டு வாயிலில் தானே இவள் என் மண்டையை உடைத்தாள்..."

கோதையும் குட்டுவனும் நொடிப்பொழுது செயலற்று நின்றனர். மறுநொடி ஏதோ ஒரு வியப்பைக் கண்டுவிட்டது போலக் கூக்குரலிட்டனர்.

"அடடே! "முல்லை"யா இவள்?..."

தன்னை அவர் இருவரும் கண்டுகொண்டது முல்லைக்கு அதிக நாணத்தைப் பெருக்கியது. வெட்கத்தால் உடல் வளைந்தாள். ஆனால் அந்த மெல்லிய உடல், விழியிமைக்கும் நேரத்திற்குள், கோதையின் தாய்மைக் கைகளுக்கிடையே அணைப்புண்டது.

எல்லோரையும் உள்ளே அழைத்துச்சென்றாள் கோதை; சிற்றுண்டி தந்தாள். இளங் காதலர் உண்பதை, குழந்தைகளைப் போல ஆசையொடும், வேடிக்கையொடும் பார்த்துக்கொண்டிருந்தனர் குட்டுவனும் அவர் மனைவியும்; அவர்க்குச் சிரிப்பு வந்தது.

அவர் மனக் கண்ணில் பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த முல்லையும் சேரலாதனும் வட்டமிட்டனர்.

சேரலாதன் கேட்டான்,,,

"ஏன் அக்கா சிரிக்கின்றீர்?,,,"

"ஒன்றுமில்லை தம்பி! இந்தப் பத்து ஆண்டுகளுக்குள் எவ்வளவு மாறிவிட்டது! வாயிலுக்கு வாயில் நண்டுபோல ஊர்ந்து திரிந்த இந்த முல்லை இன்று எப்படி அழகுச் சிலையாக மாறிவிட்டாள்!,.,"

குட்டுவன் குறுக்கிட்டார்,

"ஏன் சேரலாதன் மட்டும் என்னவாம்! என் கண்முன் சின்னஞ்சிறு பையலாகத் திரிந்தவன்தான் இன்று என்னைவிட உயரமாக வளர்ந்துவிட்டான்...,! அது சரி! தம்பி! ஒரு ஐயம்!..,"

"என்ன அண்ணா? கேளுங்களேன்,.."

"உனக்கும் இந்த முல்லைக்கும் குழந்தைப் பருவத்திலிருந்தே ஒத்துவராதே இப்போது எப்படி,,,?..,?"

கோதை குறுக்கிட்டாள்.

"ஆமாம் இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. இந்தக் குறும்புக்காரிதானே ஒருநாள் மாலை உன் தலைமீது கல்வீசி எறிந்தவள்? அது உன் நெற்றியில் பட்டுக் குருதி வழிந்தபோது கைகொட்டிச் சிரித்தவள்?.., மிகவும் பொல்லாதவளாயிற்றே!,....நீ அடிபட்ட துன்பத்தால், துடிக்கும்போது இவள் சிரித்தாள். அதன் பயனாக உன் இரும்புக்கையால் ஒரு அறை வாங்கினாள்.

இவளும் உனக்குத் தாழ்வில்லை; ஆண்பிள்ளையைப் போல எட்டி உன் முடியைப் பற்றியிழுத்து ஆட்டி உலுக்கினாள். இருவரும் கட்டிப் புரண்டீரே! நான் வந்து தடுத்த போதும் அடங்காமல் கல்லையும் மண்ணையும் வாரி வீசிக்கொண்டீர்...!.. அப்படி எலியும் பூனையுமாக இருந்தவர் எப்படி மணம் செய்துகொண்டீர்?

குட்டுவன் இடைமறுத்து.

அதுவும் நம்மைப்போன்ற திருமணமா?... காதல் திருமணம் !பெற்றோர்க்குத் தெரியாமல் ஊரை விட்டு ஓடிச் செய்துகொண்ட பதிவுத் திருமணம்!..." என்றுகூறிச் சிரித்தார்.

கோதையும் அவள் கணவனும் பேசிக்கொண்டேயிருந்தனர். இளங்காதலர் வாய் திறந்தனரில்லை. நாணத்துடன் தலை குனிந்திருந்தனர்.

கோதை இன்னுமொரு "இனிப்பு முறுக்கை" எடுத்து முல்லையிடம் நீட்டினாள். அவள் அதை மறுத்துச் சேரலாதன் பக்கம் சுட்டிக்காட்டி "அவருக்குக் கொடுங்கள் ! "என்று கூறினாள்.

சேரலாதனும் அதை வாங்கிக் கொள்ளவில்லை...'எனக்கு வேண்டாம், முல்லைக்கே கொடுங்கள்! இந்த நாட்களில் அவள் தான் குறைவில்லாமல் உண்ண வேண்டும்" என்று இருபொருள் படக் கூறினான். முல்லை தலை குனிந்தாள். அவள் கன்னங்களில் செம்மை படர்ந்தது. கோதை அறிந்து கொண்டு அன்புடன் இழுத்து அணைத்துக்கொண்டே.

கெட்டிக்காரியடீ நீ! எத்தனை மாதம்...?" என்று கேட்டாள். நான்கு விரல்களைக் காட்டி முல்லை முறுவலித்தாள்.

பேச்சு வளர்ந்து கொண்டே சென்றது. பழைய நாட்கள் அந்தப் பேச்சில் பளிச்சிட்டன.

குட்டுவனும் கோதையும் சேலத்திலிருந்தபோது அவர் தம் வீட்டிற்கு எதிர்த்தாற்போல இரு வீடுகள் இருந்தன. அந்த இருகுடும்பத்துப் பெ[illegible]ரும் மிகவும் அன்போடு பழகிவந்தனர். ஆனால் அவர் தம் குழந்தைகளோ நேர்மாறாக இருந்தனர். அடுத்தடுத்த வீட்டுக் குழந்தைகளான சேரலாதனும், முல்லையும் சண்டை போட்டுக் கொள்ளாத நாளே இல்லை. வீட்டிலும் வாயிலிலும் பள்ளிக்கூடத்திலுமாக அவர் பகை வளர்ந்து கொண்டே சென்று கடைசியில் இருவீட்டுப் பெரியவரும் தீராப்பகையை மூட்டி வைத்தது. காலம் ஓடியது. முல்லை நங்கையானாள்.

சேரலாதன் காளையானுன். பிள்ளைப்பருவத்துப் பகைவரான இருவர் நெஞ்சத்துள்ளும்.... அன்பு முகைவிட்டுப் பூத்துக் குலுங்கியது. வெறுப்பு நெஞ்சங்கள் விருப்பு நெஞ்சங்களாக அணுகின. பெற்றேர் அறிந்தனர். கடிந்தனர், தடைசெய்தனர், காதல் வென்றுவிட்டது. காதலர் ஊரை விட்டு ஓடிவந்து பதிவுத் திருமணம் செய்துகொண்டனர்.

நெடுநேரத்திற்குப்பின் சேரலாதனும் முல்லையும் எழுந்தனர். புறப்பட்டனர், குட்டுவனும் கோதையும் பிரியாவிடை நல்கினர்.

இளங் காதலர் செல்வதைப் பார்த்துக்கொண்டே சிலையாக நின்றுர் குட்டுவன். கோதை அவரது அமைதியைக் கலைத்தாள்.

"என்ன அப்படியே சிலையாக நின்றுவிட்டீரே!

"ஆமாம் கோதை! இளவயதில் அவர் இருவரும் இருந்ததைப் பார்த்தவர், பிற்காலத்தில் இப்படிக் காதலராக, இணைவார் என்று கனவிலும் கருதியிருக்கமாட்டார், பார்த்தாயா கீரியும் பாம்பும் "அன்றில்" இணையாக மாறிவிட்டதை!... இயற்கையின் ஆற்றலே ஆற்றல்!...."

கணவரது பேச்சை மனைவி ஏற்றுக்கொண்டாள்.

குட்டுவன் உள்ளே சென்று உட்கார்ந்து, குறுந்தொகையை எடுத்துப் புரட்டினுர். கண்களில் பட்ட முதல் பாடல் இதுதான்,

இவன்இவள் ஐம்பால் பற்றவும், இவள்இவன்
புன்றலை ஓரி வாங்குநள் பரியவும்,
காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப, மன்னே
நல்லைமன் றம்மபாலே! மெல்லியல்
துணை மலர்ப் பிணையல் அன்னஇவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே!

(ஐம்பால் - பெண்தலைமயிர்; புன்றலை - புன் - தலை இளந்தலை; ஓரி - ஆண்மயிர்; பரியவும் - பற்றிப் பிய்க்கவும்; ஏதில் - குற்றமற்ற (கள்ளமற்ற) சிறுசெரு - சிறு சண்டை)

மோதாசனுரின் பாடலில் வெறும் கற்பனையும் புலமையும் மட்டுமோ உள்ளன? அருமையான "உளவியல் உண்மை" ஆழ்ந்து கிடக்கிறதன்றே!

குட்டுவன் நெஞ்சம் புலவர் பெருமகனை வாழ்த்தி வணங்கியது.

*

குனிந்த தலை நிமிர்த்தும் பொன்னேடு!

தென்மொழி வந்தது. தேன் எனச் சுவைத்தேன். மொழிப் பற்று, நாட்டுப் பற்று, இனப்பற்று இவற்றோடு பகுத்தறிவுப் பற்றும் நிரம்பித் துளும்புகின்றன. தென்னகத்தின் தலை நிமிர்க்கத் தக்கவை. பாடல்கள், கருத்துரைகள், கட்டுரைகள் பண்புமிக்கவை. தனித் தமிழ்த் தகுதி வாய்ந்த முயற்சி. எதிர்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் ஈடுகொடுத்து வென்றிட்டால் **'தென்மொழி'** நிலைத்த புகழ் சேர்க்கும் பொன்னேடு! நெஞ்சுகந்த வாழ்த்துக்கள்.

ப. கண்ணன்,
ஆசிரியர் 'பகுத்தறிவு' சலகண்டபுரம்.

0 0 0

முத்தமிழ்ப் பறை.

தூயதமிழில் எழுதுவதும், பேசுவதும் தமிழின் முன்னேற்றத் திற்குத் தடைக்கற்கள் எனப் பிழைபடப் பேசிவரும் பேராசிரியர் பலரின் கூற்றுக்களைச் சுவடுகாணுதொழிக்கு முகத்தான் தனித் தமிழிலேயே சுவை பொதுள, பேச, எழுத இசைக்க இயலுமெனப் பறை முழக்கும் **'தென் மொழி'** தமிழகத்தின் கருவூலப் பெட்டகம்.

- வித்துவான். மு. **விவேகானந்தம்**, பாலப்பாடி.

0 0 0

தேன்மொழி.

பக்கத்திற்குப் பக்கம் மணம் கமழும் சொற்கள். எழுத்திற்கு எழுத்துத் தேன் சொட்டுகிறது. தேன் உண்ட வண்டானேன்.

- **பால்**, பாகூர். -

0 0 0

குறைமதியாளர்க்கோர் நிறைமதி!

தமிழின் இனிமையைச் சுவைக்கத் தெரியாது, அதில் குறை காணும் குறைமதி கொண்டவர்க்குத் தென்மொழி அறிவுச் சுடர்! இலக்கியக் கருவூலம்! இனிய தென்றல். வளர்க தென்மொழி!

- மு. **பாஸ்கரன்**, பெங்களூர்-2.

0 0 0

பாலைக்கோர் சோலை.

தமிழ்நாடு, சிறந்த இலக்கியத்தாள் இல்லாத ஓர் பாலை! 'தென்மொழி' அக்குறை நீக்கவந்த ஓர் சோலை! மு. மாறன், மாணூர்பட்டி.

அறிவுச் சுவை!

தமிழனுக்கு அறிவூட்டும் சுவையான இலக்கிய ஏடு!

- மு. மனோகரன், குமரப்பட்டி.

0 0 0

தொட்டனைத்தூறும்.........!

அழியாப் பேரின்பமும், ஆன்றவிந்த தமிழறிவும் நல்கும் இவ்விதழ் ஓர் மணற்கேணி.

- அருட்செல்வன், பொள்ளாச்சி.

0 0 0

கன்னடத்தார் முன்னடத்தை!

நான்கன்னட நாட்டைச் சேர்ந்தவன். தமிழ் கற்றுக்கொண்டிருக்கிறேன். 'தென்மொழி' இலக்கிய இதழைப் படித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். இந்த இதழ் நாட்டு மக்களின் நலத்திற்கும் அவர்தம் மொழி வளத்திற்கும் 'தாய்' போன்றது. தமிழுக்குத் தனிமொழியிருந்தும். வடமொழி கலக்க எண்ணுவோர்க்கு இது ஒரு பாடமே ஆகும். தங்கள் பணி ஓங்குக!

- தென்மொழிப்பித்தன். ந. முனிசாமி,
(Shimoga கன்னடம்.)

[அன்பரின் தமிழ்ப்பற்றைப் போற்றுகிறோம். தமிழின் கிளை மொழியினரான இவருக்குள்ள தமிழ்ப் பற்றுக்கூட, தமிழர் என மார்தட்டுவார் பலருக்கு இல்லாதிருப்பது நாணுதற்கு மட்டுமன்று வருந்துதற்குமுரியது.
ஆ. ர்.]

0 0 0

தமிழா....தெளிவு.

மன்மொழி மலர்ந்திம் மாநிலம் தழைத்திடத்
தென்மொழி எழுந்தது தெளிவுகொள் தமிழனே!

- புலவர். ஆ. முகிலன் -

0 0 0

மொழிக்குத் தென்மொழி.

"தென்மொழியால் மொழிவளரும் என்று கண்டேன்"

- ப. இளம்பரிதி, மேட்டூர்அணை -

0 0 0

புத்துயிர்.

'தென்மொழி' தமிழுக்குப் புத்துயிர் ஊட்டுகின்றது,

- வி. ஏ. வேலன், பம்பாய்-17.

கருத்துக் கோவை

அறிஞர் (செல்) வாக்கு!

சில நூல்கள் தலைமுறை தலைமுறையாகச் செல்வாக்குப் பெற்று விளங்குவதற்குக் காரணம் பொது மக்கள் விரும்புகின்றனர் என்பது அன்று; அறிஞர்கள் விடா முயற்சியோடு அவற்றைப் போற்றிப் போற்றிப் பொதுமக்கள் மதிக்குமாறு செய்து விட்டனர் என்றே கூற வேண்டும்.

- மு. வரதராசனார், எம். ஏ.

∴ ∴ ∴

அகத்தியர் நீண்டார்!

அகத்தியர் தமிழில் இலக்கணஞ் செய்தார் என்பதனோடமையாது, தமிழையே செய்தாரென்றும் வரலாற்று முறைமையறியாத புலவர்கள் பாட்டாகவும் நீட்டிவிட்டனர்.

மணி. திருநாவுக்கரசர்.

∴ ∴ ∴ ∴ ∴

மிகப் பழமையே மிகப் புதுமை!

பழமைக்கும் பழமையானவற்றையே தேர்ந்தெடுத்துப் புதுமைக்கும் புதுமையாகும் வகையில் உணர்ச்சியூட்டிப் படைக்கும் திறன் புலவர் பெருமக்களிடம் உள்ளது.

ஐ. எல். உலோவ்சு.

∴ ∴ ∴

இயற்கை இலக்கியம்.

இலக்கியம், இயற்கையின் மறு பதிப்பாக அமைவதை நாம் விரும்பவில்லை; ஏனெனில் இயற்கைதான் எப்பொழுதும் நம் கண் முன்னேயே காட்சியளிக்கின்றதே. நாம் விரும்புவதெல்லாம் கற்பனை கலந்த இயற்கையின் புதுத் தோற்றத்தைத்தான்.

எ. ஆபர் குரோம்பி.

∴ ∴ ∴

பாட்டுணர்வும், உரையறிவும்.

பாட்டு ஒன்றுமே உயிர்கட்கு அறிவை விளக்கி அதற்கும் மேம்பட்ட உணர்வை எழச்செய்து இன்பம் பயப்பதொன்றாய் நிலை பெறுகின்றது. உரை (நடை)ப் பயிற்சியில் அறிவு மட்டும் விளக்கம் எய்துமேயல்லாது உணர்வின் வழித்தான இன்பந் தோன்றுதல் இல்லை என்க.

- மறைமலையடிகள் -

மத (!) உரை

தனித்தமிழ் நூலாகிய திருக்குறளிற்குப் பரிமேலழகரும், வடநூலார் மதம்பற்றியே உரை வகுத்தேகினர்.

- வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் (பரிதிமாற்கலைஞர்.)

∴ ∴ ∴

இடிப்பாரை இல்லாத நண்பன்....

முரண்பட்ட செயல்களை இடித்துக் கூறத்தகுந்த நண்பர்கள் இல்லாத காரணத்தாலேயே சிலர் பெருங் குற்றங்களை அறியாமல் செய்து விடுகின்றனர்.

- பிரான்சிஸ் பேகன்.

∴ ∴ ∴

கீழ்மைக்குத் தனிமை வேண்டாம்!

ஒருவன் உள்ளத்தில் கீழ்த்தகவான ஆசைகள் வித்திடத் தொடங்கினால், அவன் காட்டின் தனிமையை நாட வேண்டாம். சந்தைக் கூட்டத்தையே நாடவேண்டும்.

ஆபிரகாம் கௌலி.

அறிவியல் உண்மைகள்.

புதன்.

இது ஒரு கோள். இது ஒளி மிக்கது. மற்றைய கோளங்களை விடக் கதிரவனுக்குமிக அண்மையில் உள்ளதால், கதிரவன் ஒளியில் மூழ்கிக் கிடக்கின்றது. சிலகால் அதிகாலையில் கிழக்கிலும், சிலகால் மாலையில் மேற்கிலும் இருக்கும். கதிரவன் தோன்ற ஒருமணி முன்னே, மறைந்த ஒரு மணி பின்னே தோன்றும். கதிரவனுக்கும் இதற்கும் உள்ள தொலை தூரம் 35,958,000 கற்களாகும். இது கதிரவனைச் சுற்ற 88 நாட்கள் பிடிக்கும். இது நிலத்தை விடச் சிறியது. இதன் எடை இம் மாநிலத்தின் எடையில் 27-ல் ஒரு பங்கேயாகும். இதன் குறுக்களவு 3000 கற்கள். கதிரவனை நெருங்கி இந்நிலவுலகைவிட 2½ மடங்கு மிகவும் அண்மையில் இது இருக்கின்றது. புதனிலிருந்து நாம் கதிரவனைப் பார்த்தால், இங்கிருந்து பார்ப்பதைக் காட்டிலும் கதிரவன் ஏழுமடங்குப் பெரியதாகத் தோன்றும்; இந்தக் கோளிற்கு வளர் பிறையும் தேய்பிறையும் உண்டு. இதுவும் கதிரவனைச் சுற்றி வருவதோடு, தன்னைத் தானேயும் சுற்றிக் கொள்கின்றது. இக் கோளில் ஒருநாள் என்பது 25 மணிக்காலமாகும். இதில் ஆறும், ஏரியும், கடலும், இல்லை. இங்குள்ள காற்று கொதிப்புடன் வீசும். இதன் அச்சு மண்டலங்கள் மிக வெப்பத்தோடு இருக்கின்றன. இந்தக் கோளில் ஈயத்தைக் கொண்டு போனால் அது உடனே உருகிவிடும் அத்தகைய சூடு எங்கும் பரவியிருக்கின்றது. அது காரணமாக அங்கு எவ்வகை உயிரும் இல்லை. இதற்குத் துணைக்கோளம் இல்லை.

சொல்லழகு 1.

(உயர்தனிச் செம்மொழியாந் தமிழ் மொழியில், படிக்குந்தொறும், படிக்குந்தொறும் சுவை பயக்கின்றனவும், கேட்குந்தொறும் கேட்குந்தொறும் செவி குளிர்விக் கின்றனவும், எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் நெஞ்சு நிறைவிக்கின்றனவும்ஆன பல்லாயிரக் கணக்கான இனிய தமிழ்ச் சொற்கள் உள. முக்கழகக் காலத்தே வாழ்ந்த மூத்த தமிழ்ப் புலவோர் பலர் தாம் யாத்த செஞ்சொற் கூட்டாம் அஞ்சொற் பாக்களில், அத்தகைய இனிமை நலங் கமழ்கின்ற பசுந்தமிழ்ச் சொற்கள் பலவற்றை ஆங்காங்கே பெய்து வைத்திருக்கின்றனர். அத்தகைய சொற்கள் பொருள் வளமும், சொல் வளமும், பொதுளியனவாய்க் கற்றார்க்குக் கள்ளின்பங் காட்டுவன. அச் சொற்களில் ஒன்றைக் கீழே தந்து விளக்கமும் தந்துள்ளோம். ஆசிரியரும், மாணவரும் தாங் கற்குங் கால் நெஞ்சு புகுந்த அஞ்சொற்களை மாந்தி மகிழ்ந்திருப்பா ராகலின், அவற்றைப் பலரும் செவிவாயருந்தித் தண்டமிழ்ப் பசி அடங்க வேண்டும் பொருட்டு, இப்பகுதிக்கு எழுதியனுப்ப வேண்டு கின்றோம். - ஆ. ர்.)

புலனுழுதுண்மார்.

வறிதே உண்டு களித்து உறங்குவோரை விட, உழுதுண்பவர் பல் வகையாலும் சிறந்தவர் ஆவர்.

'**உழுவார் உலகத்திற் காணி**' என்றும்,

'உழவே தலை' என்றும்,

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்' - என்றும்,

கூறினர் பொய்யா மொழியாரும்.

இவ்வாறு **நிலத்தை உழுது உண்ண** முடிந்த உழவர் போலவே, புலத்தால் உழுது உண்ணுவோராகிய கற்றவரும் நல்வாழ்க்கை வாழத் தக்கோரே என்றும் சான்றோர் கருதினர்.

நிலத்தை உழுது உண்ணுவார், **நிலமுழுதுண்மார்** என்பாராயின், புலத்தால் (அறிவால்) உழுது உண்பவராகிய கற்றோரைப் **புலனுழுதுண்மார்** என்று கூறியுள்ளனர்.

இந்த அழகிய சொல்லைப் பெய்துவைத்தவர் **கோவூர்கிழார்** என்னும் செஞ்சொற் புலவர் ஆவர். (புறநானூறு 46.)

பதிவுஎண். எம். 7211

சேலத்தில் நீங்கள் மறவாத ஒன்று!

கண்ணன் ஓவியக் கூடம்

குகை, சேலம்—1

○

எழுத்து, உருவ விளம்பரப் பலகைகள்.

திரைப்பட விளம்பரக் கண்ணாடிகள்
(CINIMA SLIDES)

புத்தக அட்டைப்படங்கள்

முதலியவை தேவைப்படுகின்றனவா?

உடனே எழுதுங்கள்

(வெளியூர் வேலைகளை உடனே பார்க்கின்றோம்)

○

KANNAN CHITHRA SALAI,

TIRICHI ROAD,

GUGAI, SALEM—1.

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவரால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பெற்றுப், பெருஞ்சித்திரன் அவரை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பெற்றது.

பண்டாரகர்

மா. இராசமாணிக்கனார் எம்.ஏ.எம்.ஓ.எல்.

அவர்தம் அரிய நூல்கள்.

பழந்தமிழர் வாழ்வு முறைகளையும், வரலாற்றுச் சிறப்புக்களையும், ஆட்சி நெறிகளையும், கலைத் திறன்களையும் செப்பமாக எடுத்துக்கூறும் உயர் தமிழ் நூல்கள்.

இன்றே வாங்கிப் படித்துப் பயனடைக.

தமிழக வரலாறு	3—00
தமிழக ஆட்சி	2—00
தமிழகக் கலைகள்	2—50
தமிழர் நாகரிகமும் பண்பாடும்	2—50
சைவ சமய வளர்ச்சி	5—00
தமிழரசி (புதினம்)	2—50
நாட்டுக்கு நல்லவை (தமிழகப் பெண்மணி ஒருத்தியின் சீர்திருத்தச் செயல்களைக்கூறும் அருமையான புதினம்)	3—50

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59. பிராட்வே

சென்னை 1.